# மனிதனில் நோய்எதிர்ப்புக்குறையை ஏற்படுத்தும் நோய்க்கிருமி (HIV) மற்றும் தானாக பெற்ற நோய் எதிர்ப்பு குறைப்பாடு கூட்டறிகுறி (AIDS) (தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 2017

---

## சட்டப்பிரிவுகளின் அமைப்பு

---

## அத்தியாயம் - 1

### முன்னுரை

**பிரிவுகள்:**

1. குறுகிய தலைப்பு, எல்லை, தொடக்கம்
2. சொற்பொருள் விளக்கம்.

## அத்தியாயம் - 2

### சில செயல்களை தடை செய்தல்

3. பாகுபாட்டை தடை செய்தல்
4. சில செயல்களை தடை செய்தல்

## அத்தியாயம் - 3

### தெரிவிக்கப்பட்ட ஒப்புதல்

5. எச்.ஐ.வி. பரிசோதனை அல்லது சிகிச்சை மேற்க்கொள்ள தெரிவிக்கப்பட்ட ஒப்புதல் பெறுதல்
6. சில சந்தர்ப்பங்களில் எச்.ஐ.வி. பரிசோதனை அல்லது சிகிச்சை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டு ஒப்புதல் பெற அவசியம் இல்லை
7. பரிசோதனை மையங்கள் போன்றவற்றிக்கான வழிகாட்டு நெறிமுறைகள்

## அத்தியாயம் - 4

## எச்.ஐ.வி. நிலையை வெளிப்படுத்துதல்

8. எச்.ஐ.வி. நிலையை வெளிப்படுத்துதல்
9. எச்.ஐ.வி-யுள்ள நபரின் எச்.ஐ.வி. நிலையை அவரின் துணைவருக்கு வெளிப்படுத்துதல்
10. எச்.ஐ.வி. பரவலை தடுப்பதற்க்கான கடமை

## அத்தியாயம் - 5

## நிறுவனங்களின் கடமைகள்

11. தகவல்களின் இரகசியத்தன்மை
12. நிறுவனங்களுக்குரிய எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் கொள்கை

## அத்தியாயம் - 6

## எச்.ஐ.வி.யோடு வாழ்பர்களுக்கான கூட்டு மருந்து சிகிச்சை முறை மற்றும் சந்தர்ப்பவாத நோய்தோற்றுகளின் மேலாண்மை

13. மத்திய அரசு மற்றும் மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

14. மத்திய, மாநில அரசுகளால் மேற்கொள்ளப்படும் கூட்டு மருந்து சிகிச்சை முறை மற்றும் சந்தர்ப்பவாத நோய்தோற்றுகளின் மேலாண்மை

## அத்தியாயம் - 7

## மத்திய அரசு மற்றும் மாநில அரசு மேற்கொள்ளும் நலத்திட்ட நடவடிக்கைகள்

15. மத்திய அரசு மற்றும் மாநில அரசு மேற்கொள்ளும் நலத்திட்ட நடவடிக்கைகள்
16. எச்.ஐ.வி. அல்லது எயிட்ஸால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளின் சொத்துகளை பாதுகாப்பது
17. எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் குறித்த தகவல், கல்வி மற்றும் தகவல்தொடர்பு திட்டங்களை பரவலாக்கல்
18. எச்.ஐ.வி. அல்லது எயிட்ஸ் தொற்றுடைய பெண்கள் மற்றும் குழந்தைகள்

## அத்தியாயம் - 8

## பாதுகாப்பான பணி சூழல்

19. பாதுகாப்பான பணி சூழல் அளிப்பது நிறுவனங்களின் கடமை
20. நிறுவங்களின் பொதுவான பொறுப்பு.
21. குறைத்தீர்க்கும் நெறிமுறை.

## அத்தியாயம் - 9

## ஆபத்துகளை குறைக்க கையாளப்படும் உத்திகளை பரவலாக்கல்

22. ஆபத்துகளை குறைக்க கையாளப்படும் உத்திகள்

## அத்தியாயம் - 10

## குறைதீர்ப்பாணையர் நியமனம்

23. குறைதீர்ப்பாணையர் நியமனம்
24. குறைதீர்ப்பாணையரின் அதிகாரங்கள் .
25. புகார் அளிப்பதின் வழிமுறை
26. குறைதீர்ப்பாணையரின் ஆணைகள்
27. குறைதீர்ப்பாணையருக்கு உதவிபுரியும் அதிகாரிகள்
28. மாநில அரசுக்கு அளிக்கப்படும் அறிக்கை

## அத்தியாயம் - 11

## சிறப்பு விதிகள்

29. இருப்பிட உரிமை
30. திருமணத்திற்க்கு முன் எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் குறித்த தகவல், கல்வி மற்றும் தகவல்தொடர்பு
31. அரசின் பாதுகாப்பு அல்லது காவலில் உள்ள நபர்கள்
32. மூத்த உடன்பிறப்பிற்க்கு பாதுகாவலருக்கான அங்கீகாரம்
33. நடைமுறையிலுள்ள உயிலுக்கு பாதுகாவலர் நிலை மற்றும் விருப்ப ஆவண பாதுகாவலர் நிலை

## அத்தியாயம் - 12

## நீதிமன்றத்தில் பின்பற்றப்படும் சிறப்பு நெறிமுறை

34. அடையாளத்தை மறைத்தல்
35. பராமரிப்பு விண்ணப்பம் / மனு

36. தண்டனை அளித்தல்

## அத்தியாயம் - 13

### அபராதங்கள்

37. சட்ட விதிமீறலுக்கான அபராதங்கள்
38. குறைதீர்ப்பாணையரின் ஆணைகளை பின்பற்ற தவறியதற்கான அபராதங்கள்
39. சட்ட நடவடிக்கையில் இரகசியத்தன்மையை மீறியதற்க்கான அபராதங்கள்
40. பழிவாங்கப்படுவதற்க்கு தடை
41. குற்றங்களை விசாரிக்கும் நீதிமன்றங்கள்
42. பிடியாணை தேவையில்லாத மற்றும் பிணையில் வெளிவர முடியாத படியும் உள்ள குற்றங்கள்

## அத்தியாயம் - 14

### இதர சட்டப்பிரிவுகள்

43. இச்சட்டம் மற்ற சட்டங்களின் மீது மேலுரிமை செயல்திறனை கொண்டிருக்கும்
44. நல்ல நம்பிக்கையில் செய்யப்பட்ட செயலை பாதுகாத்தல்
45. அதிகாரங்களை பிரதிநிதித்துவம் செய்து வழங்குதல்
46. வழிகாட்டு நெறிமுறைகள்
47. சட்டவிதிகளை இயற்ற மத்திய அரசிற்க்கு அதிகாரம்
48. சட்டவிதிகளை பாராளுமன்றத்தின் இரு அவைகளின் முன்பும் வைத்தல்
49. சட்டவிதிகளை இயற்ற மாநில அரசிற்க்கு அதிகாரம் மற்றும் அதனை ஒப்புகைக்காக வைத்தல்
50. சிரமமானவற்றை நீக்கும் அதிகாரம்

# மனிதனில் நோய்எதிர்ப்புக்குறையை ஏற்படுத்தும் நோய்க்கிருமி (HIV) மற்றும் தானாக பெற்ற நோய் எதிர்ப்பு குறைப்பாடு கூட்டறிகுறி (AIDS) (தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 2017

**2017-ஆம் ஆண்டின் சட்டம் எண் 16**

**[20 ஏப்ரல் 2017]**

இச்சட்டமானது மனிதனில் நோய்எதிர்ப்புக்குறையை ஏற்படுத்தும் நோய்க்கிருமி (HIV) மற்றும் தானாக பெற்ற நோய் எதிர்ப்பு குறைப்பாடு கூட்டறிகுறி (AIDS) போன்றவற்றை தடுப்பதற்க்கும் கட்டுபடுத்துவதற்க்கும் இயற்றப்பட்டுள்ளது. மேலும் மேற்குறிப்பிடப்பட்ட நோய்க்கிருமி மற்றும் கூட்டறிகுறியால் பாதிக்கப்பட்டவர்களின் மனித உரிமைகளை பாதுகாக்கவும், அதனோடு தொடர்புடைய அல்லது நிகழக்கூடிய மற்றபிற நிகழ்வுகள் செயல்கள் போன்றவற்றை பாதுகாக்கவும் இயற்றப்பட்டுள்ளது.

மனிதனில் நோய்எதிர்ப்புக்குறையை ஏற்படுத்தும் நோய்க்கிருமி (HIV) மற்றும் தானாக பெற்ற நோய் எதிர்ப்பு குறைப்பாடு கூட்டறிகுறி (AIDS) இவற்றின் பரவல் அனைவரும் மிகவும் கவலைக்கொள்ளும் ஒரு விஷயமாகும். எனவே மேற்குறிப்பிடப்பட்ட நோய்க்கிருமி மற்றும் கூட்டறிகுறியை தடுப்பதும் கட்டுப்படுத்துவதும் ஒரு அவசர தேவை ஏற்படுகிறது, ஆகையால்;

மேலும் எச்.ஐ.வியோடு வாழும் நபர்கள் மற்றும் மனிதனில் நோய்எதிர்ப்புக்குறையை ஏற்படுத்தும் நோய்க்கிருமி (HIV) மற்றும் தானாக பெற்ற நோய் எதிர்ப்பு குறைப்பாடு கூட்டறிகுறி (AIDS) இவற்றால் பாதிக்கப்பட்ட, பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ள நபர்கள் இவர்களின் மனித உரிமைகளை பாதுகாக்கவும் பத்திரப்படுத்தவும் தேவை ஏற்படுகிறது, ஆகையால்;

மேலும், மனிதனில் நோய்எதிர்ப்புக்குறையை ஏற்படுத்தும் நோய்க்கிருமி (HIV) மற்றும் தானாக பெற்ற நோய் எதிர்ப்பு குறைப்பாடு கூட்டறிகுறி (AIDS) போன்றவற்றிற்க்கு ஒரு பயனுள்ள பராமரிப்பு, ஆதரவு மற்றும் சிகிச்சை போன்றவற்றின் அவசியம் ஏற்பட்டுள்ளது, ஆகையால்;

மேலும், மனிதனில் நோய்எதிர்ப்புக்குறையை ஏற்படுத்தும் நோய்க்கிருமி (HIV) மற்றும் தானாக பெற்ற நோய் எதிர்ப்பு குறைப்பாடு கூட்டறிகுறி (AIDS) போன்றவற்றில் தொடர்புடைய மருத்துவ சேவை அளிப்பவர் மற்றும் பிற நபர்களின் உரிமைகளை பாதுகாப்பதன் அவசியம் ஏற்பட்டுள்ளது, ஆகையால்;

மேலும், ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை மனிதனில் நோய்எதிர்ப்புக்குறையை ஏற்படுத்தும் நோய்க்கிருமி (HIV) மற்றும் தானாக பெற்ற நோய் எதிர்ப்பு குறைப்பாடு கூட்டறிகுறி (AIDS) பற்றிய தனது முந்தைய ஈடுபாட்டை நினைவுகூர்ந்து மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. அதன்படி, ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையானது மனிதனில் நோய்எதிர்ப்புக்குறையை ஏற்படுத்தும் நோய்க்கிருமி (HIV) மற்றும் தானாக பெற்ற நோய் எதிர்ப்பு குறைப்பாடு கூட்டறிகுறி (AIDS) இவற்றை குறித்த அனைத்து அம்சங்களையும் முழுமையாக ஆலோசித்து உறுதிமொழி ஆவணத்தை நிறைவேற்றி ஏற்றுக்கொண்டது (2001). இந்த உலகளாவிய ஈடுபாட்டை பராமரித்து, பாதுகாத்து, விரிவான முறையில் எதிர்த்து போராடும் வண்ணம் தேசிய, பிராந்திய, சர்வதேச முயற்சிகளை ஒருங்கிணைக்கவும் தீவிரப்படுத்தவும் அவசியம் ஏற்பட்டுள்ளது, ஆகையால்;

மேலும், மேற்குறிப்பிட்ட உறுதிமொழி ஆவணத்தில் ஒரு குடியரசு நாடாக இந்தியா கையொப்பமிட்டுள்ளதால், மேற்குறிப்பிட்ட உறுதிமொழி ஆவணத்திற்க்கு உகந்த செயலுருவாக்கம் கொடுக்க வேண்டியதன் அவசியம் ஏற்பட்டுள்ளது, ஆகையால்;

கீழ்க்குறிப்பிட்டவாறு இந்திய குடியரசின் அறுபத்தியெட்டாம் ஆண்டில் பாராளுமன்றத்தால் இது நிறைவேற்றப்படுவதாக:----

## அத்தியாயம் - 1

## முன்னுரை

**1. குறுகிய தலைப்பு, எல்லை, தொடக்கம்.**—

(*1*) இச்சட்டமானது மனிதனில் நோய்எதிர்ப்புக்குறையை ஏற்படுத்தும் நோய்க்கிருமி (HIV) மற்றும் தானாக பெற்ற நோய் எதிர்ப்பு குறைப்பாடு கூட்டறிகுறி (AIDS) (தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 2017, எனப்படலாம்.

(*2*) இச்சட்டமானது இந்திய நாட்டின் அனைத்து பகுதிகளிலும் நடைமுறையில் இருக்கும்.

(*3*) மத்திய அரசு தனது அதிகாரபூர்வமான அரசிதழில் அறிவிப்பு வெளியிடும் தேதியிலிருந்து இச்சட்டமானது அமலுக்கு வரும்.

**2. சொற்பொருள் விளக்கம்.**— இச்சட்டத்தில், சூழ்நிலை வேறு விதமாக தேவைப்பட்டால் அன்றி —

(*a*) “எயிட்ஸ்” என்பது தானாக பெற்ற நோய் எதிர்ப்பு குறைப்பாடு கூட்டறிகுறி என பொருள்படும். இது மனிதனில் நோய்எதிர்ப்புக்குறையை உருவாக்கும் நோய்க்கிருமிகளால் ஏற்படும் பலவித அறிகுறிகள் இணைந்து உண்டாக்கும் ஒருவித நிலையாகும். இவ்வாறு இது எச்.ஐ.வி. நோய்க்கிருமியை கொண்டுள்ள நபரின் உடலில், அவ்வப்போது குறிப்பிடுவது போல், நோய் எதிர்ப்பு அமைப்பை தாக்கி உயிர்க்கொல்லி நிலையையோ வேறு ஏதாவது மோசமான நிலையையோ உருவாக்க கூடிய திறனை கொண்டுள்ளது;

(*b*) “ஒப்புதல் அளிக்கும் திறன்” எனப்படுவது எந்த ஒரு முடிவையும், புறநிலை அடிப்படையில் தீர்மானித்து, முன்மொழியப்பட்ட செயலின் தன்மை மற்றும்

விளைவுகளை புரிந்துகொண்டு பாராட்டி அத்தகைய செயலின் மீது அறிவிக்கப்பட்ட முடிவை எடுப்பதாகும்;

*(c)* "எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்ட குழந்தை" என்பது பதினெட்டு வயதிற்க்கு உட்பட்டு, எச்.ஐ.வி. நோய்க்கிருமியை கொண்டுள்ளவராகவோ, அல்லது எயிட்ஸால் தான் வழக்கமாக சேர்ந்து வசித்த பெற்றோரையோ அல்லது பாதுகாவலரையோ இழந்தவராகவோ, அல்லது எய்ட்ஸால் அனாதையாக்கப்பட்ட குழந்தைகள் வாழும் குடிமையில் இருக்கிறவராகவோ, உள்ள குழந்தையாகும்;

*(d)* "பாகுபாடு" என்பது நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ, வெளிப்படையாகவோ அல்லது ஒரு செயலின் விளைவுகளாலோ, உடனடியாகவோ அல்லது ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்திலோ:-

*(i)* ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எச்.ஐ.வி தொடர்பான அடிப்படை தன்மைகளை கொண்டுள்ள எந்தவொரு சுமை, கடமை, பொறுப்பு, இயலாமை அல்லது குறைபாடு ஆகியவற்றை ஒரு நபர் மீதோ அல்லது ஒரு குறிப்பீட்ட வகை நபர்கள் மீதோ சுமத்துவது; அல்லது

*(ii)* ஒரு நபரிடமிருந்தோ அல்லது ஒரு குறிப்பீட்ட வகை நபர்களிடமிருந்தோ, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எச்.ஐ.வி தொடர்பான அடிப்படை தன்மைகளை கொண்டுள்ள, எந்தவொரு நன்மையையும், வாய்ப்பையும் பலனையும் மறுப்பது அல்லது தடுப்பது.

இவ்வாறாக, "பாகுபாடு" என்ற சொல் பொருள் கொள்ளப்பட வேண்டும்.

**<u>விளக்கம் 1</u>**.—இந்த சட்ட விதியின் கூறுப்படி, எச்.ஐ.வி தொடர்பான அடிப்படை தன்மையானது கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கியது:-

*(i)* எச்.ஐ.வி தொற்று கொண்டுள்ள நபராய் இருப்பது;

*(ii)* பொதுவாக எச்.ஐ.வி தொற்று கொண்டுள்ள நபருடன் வாழ்வது, வசிப்பது அல்லது கூடி வாழ்வது;

*(iii)* பொதுவாக எச்.ஐ.வி தொற்று கொண்டுள்ள நபருடன் வாழ்ந்தது, வசித்தது அல்லது கூடி வாழ்ந்தது.

**<u>விளக்கம் 2.</u>**—சில ஐயங்களை போக்கிக் கொள்ள இங்கு தெளிவுப்படுத்துவது யாதெனில், நோய்தொற்றின் அபாயத்தை குறைத்துக் கொள்ள மேற்கொள்ளப்படும் மருத்துவ பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் முன்னெச்சரிக்கைகளை பாகுபாடு என்று கருதக்கூடாது.

*(e)* "குடும்ப உறவு" என்றால் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம், 2005 (பிரிவு 43) பிரிவு 2, சட்ட விதிக் கூறு (f)-ல் வரையறுக்கப்பட்டுள்ள படி உள்ளதாகும்;

*(f)* "நிறுவனம்" என்றால் ஒருவரோ அல்லது ஒன்றிற்க்கு மேற்ப்பட்டவரோ இணைந்து, 12 மாதக் காலத்திற்க்கு மேலாக, முறையான செயல்களை கையாண்டு, இலாப நோக்கிலோ அல்லது வேறு நோக்கத்திற்க்காகவோ, பொருட்களையோ அல்லது சேவைகளையோ உற்பத்தி, வழங்கல் அல்லது விநியோகம் செய்யும் ஒரு வர்த்தக கூட்டுருக் குழுமம் அல்லது கூட்டுறவு சங்கம் அல்லது ஏதாவது ஒரு அமைப்பு ஆகும்;

*(g)* "வழிகாட்டு நெறிமுறைகள்" என்றால் மத்திய அரசு, மாநில அரசுக்கள், அரசு மற்றும் அரசு-சாரா அமைப்புகள், நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் பின்பற்றுவதற்க்காக எச்.ஐ.வி. அல்லது எயிட்ஸ் தடுப்பு, கட்டுபாடு மற்றும் மருத்துவ சிகிச்சை குறித்து எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் சம்பந்தமான கொள்கை அல்லது செயல்முறை அல்லது தொடர் நடவடிக்கை போன்றவற்றை உள்ளடக்கி மத்திய அரசு வெளியிட்டுள்ள ஒரு அறிக்கை அல்லது ஆவணம் ஆகும்;

*(h)* "சுகாதாரம் வழங்குநர்" என்றால் எந்த ஒரு தனிபட்ட நபரின் தொழிலோ அல்லது பணியோ வேறொரு தனிப்பட்ட நபரின் உடல்நலத்தை பராமரிப்பதில் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ தொடர்பு கொண்டிருப்பவர் ஆவார். எச்.ஐ.வி தடுப்பு மற்றும் சிகிச்சையளிக்கும் பிரிவுகளிலும் மருத்துவ, செவிலிய, உளவியல் அல்லது பிற சுகாதார சேவைகள் வழங்கும் மருத்துவர்,

செவிலியர், உதவியாளர், உளவியலாளர், ஆலோசகர் அல்லது பிற தனிநபர்களும் இதில் அடங்குவர்.

*(i)* "எச். ஐ. வி." என்றால் மனிதனில் நோய்எதிர்ப்புக்குறையை ஏற்படுத்தும் நோய்க்கிருமி ஆகும்;

*(j)* "எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டவர்" என்றால் எச்.ஐ.வி தொற்று கொண்டவரோ அல்லது எச்.ஐ.வி தொற்று கொண்ட அவரின் துணைவரோ (அத்தனி நபரோடு பொதுவாக சேர்ந்து வாழ்கிறவர்) அல்லது தனது துணைவரை எச்.ஐ.வி தொற்றின் நிமித்தம் இழந்தவரோ (அத்தனி நபரோடு பொதுவாக சேர்ந்து வாழ்ந்தவர்) ஆவார்.

*(k)* (*k*) "எச்.ஐ.வி. உறுதி செய்யப்பட்ட நபர்" என்றால் எச். ஐ. வி. உள்ளதா என்று ஆய்வகத்தில் ஆய்வு செய்யப்பட்டு ஆய்வின் முடிவில் "எச். ஐ. வி. உள்ளது" என்று உறுதி செய்யப்பட்ட நபர் ஆவார்.

*(l)* (*l*) "எச்.ஐ.வி. குறித்த தகவல்" என்றால் ஒரு நபரின் எச்.ஐ.வி. நிலையோடு தொடர்புடைய எந்தவித தகவலும் ஆகும். அவையாவன:--

(*i*) எச்.ஐ.வி. பரிசோதனை மேற்கொள்ளப்படுவதின் நிமித்தம் பெறப்பட்ட அல்லது எச்.ஐ.வி பரிசோதனை முடிவில் கிடைக்கும் தகவல்;

(*ii*) அந்த நபரின் கவனிப்பு, ஆதரவு அல்லது சிகிச்சை தொடர்பான தகவல்;

(*iii*) அந்த நபரை காண உதவக் கூடிய தகவல்; மற்றும்

(*iv*) அந்த நபரிடமிருந்து எச்.ஐ.வி. சோதனை, எச்.ஐ.வி. சிகிச்சை அல்லது எச்.ஐ.வி. தொடர்பான ஆராய்ச்சி அல்லது அந்த நபரின் எச்.ஐ.வி. நிலை அறிவதற்க்காக சேகரிக்கப்பட்ட, பெறப்பட்ட, அடையப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட மற்ற பிற தகவல்;

*(m)* "எச்.ஐ.வி பரிசோதனை" என்றால் எச் ஐ வியின் பிறபொருளெதிரி எனப்படும் ஆன்டிபாடி அல்லது ஆன்டிஜெனின் இருப்பதைக் கண்டறிய உதவும் ஒரு சோதனை;

*(n)* “தெரிவிக்கப்பட்ட ஒப்புதல்” என்றால் ஏற்கனவே நடைபெற்ற ஒரு நிகழ்வின் நிமித்தம், ஒரு தனி நபருக்கோ அல்லது அவரின் பிரதிநிதிக்கோ அவர் பேசும் மொழியிலோ அல்லது வேறு எந்த வழியிலோ அவருக்கு புரியும் வண்ணம், வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிட்டுள்ளபடி, அபாயங்கள், நன்மைகள் மற்றும் அதனின் மாற்று நிலைகள் பற்றிய உரிய தகவல் தெரிவிக்கப்பட்டு, எவ்வித வற்புறுத்தல், தவறான செல்வாக்கு, மோசடி, பிழை அல்லது தவறான விளக்கம் எதுவுமின்றி ஒரு திட்டமிடப்பட்ட இடையீட்டிற்க்கு தருகின்ற இசைவு ஆகும்.

*(o)* “விளம்பர அறிவிப்பு” என்றால் அரசு அதிகாரப்பூர்வமாக அச்சிட்டு வெளியிடும் அரசிதழில் வரும் விளம்பர அறிவிப்பு ஆகும்.

*(p)* “துணையாளி” என்றால் ஒருவரின் வாழ்க்கை துணை, சட்டப்படி எவ்வாறாயினும் நடப்பின் படி உண்மையான துணை அல்லது திருமண பந்தம் போலுள்ள உறவை ஒரு நபர் மற்றொரு நபருடன் கொண்டுள்ளவர் போன்றவர்கள் ஆவார்கள்.

*(q)* “நபர்” என்பவர் ஒரு தனி நபர், இந்து மதத்தை சேர்ந்த பிரிக்கப்படாத கூட்டு குடும்பம், நிறுவனம், நபர்களின் சங்கம், கூட்டுருமமான ஒருங்கிணைக்கப்பட்டு, இந்தியாவிலோ அல்லது வெளிநாட்டில்லோ பதிவுற்ற நிறுவனம், மத்திய அல்லது மாநில சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு அமைக்கப்பட்ட கழகம், கம்பனிகள் சட்டம், 1956 (பிரிவு 1, 1956) கீழ் இணைக்கப்பட்ட அரசு நிறுவனம் உள்ளடக்கிய நிறுவனம், வரையறுக்கப்பட்ட கடன்பாடு கூட்டுப்பங்காண்மை சட்டம், 2008 (பிரிவு 6, 2009) கீழ் உருவாக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட கடன்பாடு கூட்டுப்பங்காண்மை நிறுவனம், இந்தியாவுக்கு வெளியில் உள்ள ஒரு நாட்டினுடைய சட்டங்களின் கீழ் இணைக்கப்பட்ட எந்தவொரு கூட்டுருக் குழுமம், கூட்டுறவு சங்கங்களுடன் தொடர்புடைய ஒரு சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம், உள்ளூர் நிர்வாகம், வேறு எந்த செயற்கை சட்டமுறையிலான நபர் ஆவார்;

*(r)* "பரிந்துரைக்கப்பட்ட" என்பது ஏற்கனவே நடைபெற்ற ஒரு நிகழ்வின் அடிப்படையிலோ மத்திய அல்லது மாநில அரசுகளால் வரையறுக்கப்பட்ட விதிமுறைகளால் பரிந்துரைக்கப்பட்டவை ஆகும்.

*(s)* "பாதுகாக்கப்பட்ட நபர்" என்றால் எந்தவொரு நபர்.---

*(i)* எச்.ஐ.வி. தொற்றை கொண்டிருப்பவர்; அல்லது

*(ii)* எச்.ஐ.வி. தொற்றை கொண்டிருப்பவரோடு பொதுவாக வாழ்பவர், குடியிருப்பவர், சேர்ந்து வாழ்பவர்; அல்லது

*(iii)*எச்.ஐ.வி. தொற்றை கொண்டிருப்பவரோடு பொதுவாக வாழ்பவர், குடியிருப்பவர், சேர்ந்து வாழ்ந்தவர்;

*(t)* "நியாயமான ஏற்பு" என்றால் எந்தவொரு நிகழ்வுக்கு ஏற்ப, வேலை அல்லது பணியில் சிறிய மாற்றங்களை செய்து, சமமான பலன்களை அனுபவிக்க ஏதுவான அனைத்து தகுதியும் பெற்றுள்ள எச்.ஐ.வி. தொற்றை கொண்டிருப்பவரை, வேலை அல்லது பணியின் அத்தியாவசிய செயல்பாடுகளை செய்ய ஏற்றுக்கொள்வது ஆகும்.

(s) பாதுகாக்கப்பட்ட நபரை குறிப்பிடும் போது "உறவினர்" என்றால் ---

(*i*) பாதுகாக்கப்பட்ட நபரின் வாழ்க்கை துணை

(ii) பாதுகாக்கப்பட்ட நபரின் பெற்றோர்கள்

(iii) பாதுகாக்கப்பட்ட நபரின் சகோதர சகோதரிகள்

(iv) பாதுகாக்கப்பட்ட நபரின் வாழ்க்கை துணையின் சகோதர சகோதரிகள்

(v) பாதுகாக்கப்பட்ட நபரின் பெற்றோர்களின் (தாய் அல்லது தந்தை வழி) சகோதர சகோதரிகள்

(*vi*) மேற்குறிப்பிடப்பட்ட உட்பிரிவுகள் (*i*)-லிருந்து (*v*) வரை குறிப்பிடப்பட்டுள்ள உறவினர்கள் இல்லையென்றால், பாதுகாக்கப்பட்ட நபரின் எந்தவொரு பரம்பரையோ அல்லது வம்சாவளியை சேர்த்தவர்;

(*vii*) மேற்குறிப்பிடப்பட்ட உட்பிரிவுகள் (*i*)-லிருந்து (*vi*) வரை குறிப்பிடப்பட்டுள்ள உறவினர்கள் இல்லையென்றால், பாதுகாக்கப்பட்ட நபரின்

வாழ்க்கை துணையின் எந்தவொரு பரம்பரையோ அல்லது வம்சாவளியை சேர்த்தவர்;

(*v*) "கணிசமான ஆபத்து" என்றால் -

(*a*) கணிசமான ஆபத்துடைய உடல் பொருட்கள் இருத்தல்;

(*b*) எச்.ஐ.வி. தொற்றை பரப்பும் அல்லது பெறும் கணிசமான ஆபத்தை ஒருங்கே அமையப்பெற்ற சூழ்நிலை; அல்லது

(*c*) தொற்றுடைய மூலபொருளும் தொற்றில்லா நபரும் ஒரே இடத்தில் இருத்தல்

**<u>விளக்கம்</u>**: இந்த உட்பிரிவின் நோக்கதிற்காக*,* ---

*(i)* "குறிப்பிடத்தக்க ஆபத்தான உடல் பொருட்கள்" என்றால் இரத்தம், இரத்த பொருட்கள், விந்து, யோனி சுரப்பு, தாய்ப்பால், திசு மற்றும் உடல் திரவங்கள், அதாவது மூளை-தண்டுவட திரவம் (செரிப்ரோஸ்பைனல்), அம்மோனியோடிக் திரவம், காற்றழுத்த உறுப்பு திரவம் (பெரிடோனினல்), மூட்டு திரவம் (சினோவியியல்), இதய வெளியுறை திரவம் (பெரிகார்டியல்) மற்றும் உட்தசை திரவம் (ப்ளூரல்);

*(ii)* "எச்.ஐ.வி. தொற்றை பரப்பும் அல்லது பெறும் கணிசமான ஆபத்தை ஒருங்கே அமையப்பெற்ற சூழ்நிலைகள்" யாவன: ---

(*A*) யோனி, ஆசன வாய், அல்லது வாய்வழி பாலியல் உடலுறவின் மூலம் எச்.ஐ.வி. தொற்றுடைய நபரின் இரத்தம், இரத்த பொருட்கள், விந்து அல்லது யோனி சுரப்பிகள் ஒரு எச்.ஐ.வி. தொற்றில்லாத நபரை எச்.ஐ.வி. தொற்றுக்கு இட்டுச் செல்லும் வாய்ப்பை உருவாக்குகிறது.

(*B*) ஒரு எச்.ஐ.வி தொற்றுடைய நபர் மற்றும் மற்றொரு எச்.ஐ.வி. தொற்றில்லாத நபரிடம் போதை மருந்துகளை தயாரித்து உடலில் செலுத்திக்கொள்ள உபயோகப்படுத்தும் ஊசி மற்றும் பிற உபகரணங்களை பகிர்ந்து கொள்ளுதல்.

(*C*) எச்.ஐ.வி தொற்றுடைய தாயின் கருவுறுதல், குழந்தையை பெற்றெடுத்தல், குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்டுதல் போன்ற நிகழ்வுகள்;

(*D*) எச்.ஐ.வி தொற்றுடைய நபரின் இரத்தம் மற்றும் இரத்த பொருட்கள் ஏற்றல், உடல் உறுப்புகள் அல்லது பிற திசுக்கள் போன்றவற்றின் மாற்று அறுவை போன்றவை ஒரு எச்.ஐ.வி. தொற்றில்லாத நபரின் மேல் நடந்திருத்தல். ஆனால், இந்த இரத்தம், இரத்த பொருட்கள், உடல் உறுப்புகள் மற்றும் பிற திசுக்கள் போன்றவை எச் ஐ வி பிறபொருளெதிரி (ஆன்டிபாடி) அல்லது எதிரியாக்கி (ஆன்டிஜென்) போன்றவற்றிற்க்காக இறுதி முடிவெடுக்கும் வண்ணம் பரிசோதனை செய்யப்படாமலும், வெப்பம் அல்லது இரசாயன சிகிச்சையால் தொற்றில்லாதவாறு செய்யப்பட்டிருக்காமலும் இருந்திருக்க வேண்டும்.

(*E*) ஒரு எச்.ஐ.வி தொற்றுடைய நபரின் குறிப்பிடத்தக்க ஆபத்தான உடல் பொருட்களும் தாய்ப்பால் அல்லாத வேறு திரவங்களும், தொற்றில்லாத நபரின் கண்கள், மூக்கு அல்லது வாய் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள கோழை சவ்வுகள், திறந்த காயங்களில் உள்ள உறுதியில்லாத தோல், அழற்சி நிலையிலுள்ள தோல் அல்லது சிராய்ப்பு பகுதிகள் அல்லது தொற்றில்லாத நபரின் இரத்தநாள அமைப்பு போன்றவற்றில் படும் அல்லது படக்கூடிய சூழ்நிலைகள். மேலும், எச்.ஐ.வி தொற்றுடைய நபரின் இந்த குறிப்பிடத்தக்க ஆபத்தான உடல் பொருட்கள், தொற்றில்லாத நபரின் ஊசி மற்றும் குச்சியால் துளையிட்ட காயங்கள் மற்றும் காய பாதிப்புகள், நேரடி செறிவூட்டல் அல்லது ஊடுருவல் ஆகியவற்றிலும் படும் அல்லது படக்கூடிய சூழ்நிலைகளையும் உள்ளடக்கியது;

இந்த குறிப்பிடத்தக்க ஆபத்தானது கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கியதாக இருக்கக் கூடாது: ---

(*i*) வெறும் கண்களுக்குத் தெரிந்த, இரத்தம் இல்லாத சிறுநீர், மலம், கோழை, மூக்கின் சுரப்பிகள், உமிழ்நீர், வியர்வை, கண்ணீர் அல்லது வாந்தி போன்றவை;

(*ii*) இரத்தத்தோடு இரத்தம் நேரடியாக கலக்காத அல்லது சளி சவ்வு இரத்தத்தோடு சளி சவ்வு நேரடியாக படாத மனிதனின் கடிகள்;

(*iii*) எந்த பாதிப்பும் இல்லாத உறுதியான தோலுடன் இரத்தம் அல்லது வேறு இரத்தப் பொருட்கள் கலக்காத நிலை; மற்றும்

(*iv*) குறிப்பிடத்தக்க அபாயங்களை தவிர்க்க உதவும், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப விதிகளை மீறாமல், அவற்றை உறுதியாக பின்பற்றி, தொழில்சார் மையங்களில் பல வகையில் விஞ்ஞானரீதியாக தனிநபர்களால் பயன்படுத்தப்படும் உலகளவிலான பொதுவான முன்னெச்சரிக்கைகள், தடைசெய்யும் தொழில்நுட்பங்கள் மற்றும் தடுப்பு நடைமுறைகள்;

(*w*) "மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம்" என்பது எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் துறையில் உள்ள திட்டங்களை செயல்படுத்துவதற்கு மாநில அரசு சார்பாக ஏற்படுத்தப்பட்ட ஒரு முதன்மை நிறுவனம் ஆகும்;

(*x*) "மாநில அரசு" என்பது இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 239-வது பிரிவின் கீழ் நாட்டின் குடியரசு தலைவரால் ஒரு பொதுமை பகுதிக்காக நியமிக்கப்பட்ட ஒரு பொதுமை பகுதியின் நிர்வாகி ஆவார்; மற்றும்

(*y*) "உலகளவிலான பொதுவான முன்னெச்சரிக்கைகள்" என்பது நோய் உண்டு பண்ணுகிற கிருமிகளின் (எச்.ஐ.வி உள்ளிட்ட) ஆபத்துக்களைத் பரவாமல் தடுக்கும் அல்லது கட்டுப்படுத்தும் தடுப்பு கட்டுப்பாடுகளைக் குறிக்கிறது. கல்வி, பயிற்சி

போன்றவற்றையும், கையுறைகள், மேல் அங்கிகள், முகமூடிகள் போன்றவற்றை பயன்படுத்துதலையும், கை கழுவுதல் மற்றும் பாதுகாப்பான பணி நடைமுறைகள் போன்றவற்றையும் குறிக்கும்.

## அத்தியாயம் - II

## சில செயல்களை தடை செய்தல்

3. **பாகுபாட்டை தடை செய்தல்.---** எந்தவொரு நபரும் பின்வரும் எந்தவொரு அடிப்படையிலும் பாதுகாக்கப்பட்ட நபருக்கு எதிராக பாகுபாடு காட்டக்கூடாது, அதாவது: ---

*(a)* தகுதிவாய்ந்த பணியாளரை பணியிலிருந்து நீக்கும் போது மட்டும் கீழ்க்குறிப்பிட்ட சூழ்நிலைகளை தவிர்த்து, வேறு எந்த நிலையிலும் வேலைவாய்ப்பு அல்லது பணி போன்றவற்றை மறுத்தல், அவற்றிலிருந்து நீக்குதல் ---

(*i*) பாதுகாக்கப்பட்ட நபர் ஒருவர் தன் பணியிடத்தில் எச்.ஐ.வியை தன்னிடமிருந்து பிறருக்கு பரவுவதற்கான கடும் ஆபத்தை ஏற்படுத்துகிறார் அல்லது வேலைக்குரிய கடமைகளை நிறைவேற்றத் தகுதியற்றவராக இருக்கிறார் என்று தகுதி வாய்ந்த, பிறசார்பற்ற சுகாதார வழங்குநரின் எழுத்துமூல மதிப்பீட்டின் அடிப்படையில்; மற்றும்

(*ii*) நியாயமான தங்குமிடத்தை வழங்க முடியாமல் போனதற்க்கான நிர்வாக அல்லது நிதிக் நெருக்கடியின் தன்மை மற்றும் அளவு போன்றவற்றை குறிப்பிட்டு வேலையில் அமர்த்துபவர் வெளியிட்டுள்ள எழுத்துமூல மதிப்பீட்டின் நகல்;

*(b)* வேலைவாய்ப்பு அல்லது பணி தொடர்பாக நியாயமற்ற முறையில் நடத்துவது;

*(c)* சுகாதார சேவையை மறுப்பதும் அல்லது இடைநிறுத்துவதும், இவை வழங்கும் போது நியாயமற்ற முறையில் நடந்து கொள்வதும்;

*(d)* கல்வி, நிறுவனங்கள் மற்றும் அவற்றின் சேவைகளை மறுப்பதும் அல்லது இடைநிறுத்துவதும், இவை வழங்கும் போது நியாயமற்ற முறையில் நடந்து கொள்வதும்

*(e)* கட்டணம் செலுத்தியோ அல்லது கட்டணம் இல்லாமலோ பொது மக்களின் பயன்பாட்டிற்க்காக வழக்கமாக கிடைக்கும் எந்தவொரு பொருள், விடுதி, சேவை, வசதி, நன்மை, சலுகை மற்றும் வாய்ப்பு அல்லது அணுகல் போன்றவற்றை மறுப்பதும் அல்லது இடைநிறுத்துவதும், இவை வழங்கும் போது நியாயமற்ற முறையில் நடந்து கொள்வதும்; மேலும் கடைகள், பொது உணவகங்கள், விடுதிகள் மற்றும் பொது பொழுதுபோக்கு இடங்கள், கிணறுகள், குளங்கள், குளிக்க பயன்படும் நீர்நிலைகள், சாலைகள், இடுகாடுகள்/சுடுகாடுகள்/கல்லறைகள், இறுதி சடங்கு நிகழ்ச்சிகள் மற்றும் பொதுமக்கள் கூடும் உல்லாசபோக்கிடங்கள் போன்றவற்றை பயன்படுத்த பாதுகாக்கப்பட்ட நபருக்கு மறுப்பதும் அல்லது இடைநிறுத்துவதும், இவை பயன்படுத்தும் போது நியாயமற்ற முறையில் நடந்து கொள்வதும்;

*(f)* சுதந்தரமாக நடமாடும் உரிமையை பாதுகாக்கப்பட்ட நபருக்கு மறுப்பதும் அல்லது இடைநிறுத்துவதும், இவ்வுரிமையை பயன்படுத்தும் போது நியாயமற்ற முறையில் நடந்து கொள்வதும்;

*(g)* இருப்பிடத்தில் தங்குதல், இருப்பிடத்தை வாங்குதல், வாடகைக்கு விடுதல் அல்லது சொத்து வாங்குதல் போன்ற அடிப்படை உரிமையை பாதுகாக்கப்பட்ட நபருக்கு மறுப்பதும் அல்லது இடைநிறுத்துவதும், இவ்வுரிமையை பயன்படுத்தும் போது நியாயமற்ற முறையில் நடந்து கொள்வதும்;

*(h)* பொது அல்லது தனியார் நிலைகளில் நடத்தப்படும் தேர்தலில் நிற்கும் வாய்ப்பு அல்லது, பொது அல்லது தனியார் அலுவலகத்தில்

பொறுப்பேற்று நடத்த வாய்ப்பு போன்ற அடிப்படை உரிமையை பாதுகாக்கப்பட்ட நபருக்கு மறுப்பதும் அல்லது இடைநிறுத்துவதும், இவ்வுரிமையை பயன்படுத்தும் போது நியாயமற்ற முறையில் நடந்து கொள்வதும்;

*(i)* அரசு அல்லது தனியார் நிறுவனங்களின் பாதுகாப்பில் அல்லது காவலில் இருந்தால் அந்நிறுவனங்களில் நுழையும் அடிப்படை உரிமையை பாதுகாக்கப்பட்ட நபருக்கு மறுப்பதும் அல்லது இடைநிறுத்துவதும், இவ்வுரிமையை பயன்படுத்தும் போது நியாயமற்ற முறையில் நடந்து கொள்வதும்;

*(j)* காப்பீடு படிப்புகளால் ஆதரிக்காவிட்டால் காப்பீடு வழங்குதலை பாதுகாக்கப்பட்ட நபருக்கு மறுப்பதும் அல்லது காப்பீட்டை பயன்படுத்தும் போது நியாயமற்ற முறையில் நடந்து கொள்வதும்;

*(k)* பாதுகாக்கப்பட்ட நபரை தனிமைப்படுத்தல் அல்லது பிரித்து வைத்தல்;

*(l)* வேலைவாய்ப்பு பெறுவதற்கு, அல்லது சுகாதார சேவைகள் அல்லது கல்வியை பெறுவதற்கு அல்லது அவற்றை தொடர்வதற்க்கு அல்லது மற்ற சேவை அல்லது வசதிகளை பயன்படுத்துவதற்கு எச்.ஐ.வி சோதனையை ஒரு முன்-தேவை அல்லது நிபந்தனையாக்குவது;

உட்பிரிவு (a)-ன் கீழ் துணை உட்பிரிவு (i)-ன் படி எழுத்துமூல மதிப்பீட்டை வழங்க முடியவில்லை என்றால், குறிப்பிடத்தக்க அபாயம் இல்லை என்றும் மற்றும் அந்த நபர் வேலைக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கு தகுதியுள்ளவர் என்றும் சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் கருதப்படுவார். உட்பிரிவு (a)-ன் கீழ் துணை உட்பிரிவு (ii)-ன் படி எழுத்துமூல மதிப்பீட்டை வழங்க முடியவில்லை என்றால், எந்தவொரு நிர்வாக நெருக்கடியோ அல்லது நிதி நெருக்கடியோ இல்லை என்று கருதப்படும்

**4.** ***சில செயல்களை தடை செய்தல்***: -- எந்தவொரு நபரும், ஒரு பாதுகாக்கப்பட்ட நபரை பற்றியோ அல்லது ஒரு பாதுகாக்கப்பட்ட நபரின் குழுவை பற்றியோ

பொதுவாகவோ அல்லது குறிப்பாகவோ, பேச்சு அல்லது எழுதப்பட்ட வார்த்தைகளாலோ, அச்சிட்டு வெளியிடுதல், விளம்பரப்படுத்துதல், வழக்குரையாடுதல் அல்லது கருத்து பரிமாறுதல் போன்றவற்றை சைகைகள் மூலமோ அல்லது காணக்கூடிய உருவிலோ செய்து வெறுப்புணர்வை காட்டக் கூடாது. அப்படி செய்தால், அது வெறுப்புணர்வை வளர்க்கும் நோக்கமாகவோ, அல்லது வெறுப்பு, பாகுபாடு அல்லது உடல் ரீதியிலான வன்முறை போன்றவற்றிற்கு பாதுகாக்கப்பட்ட நபர்களை பிறருக்கு வெளிக்காட்டும் நோக்கத்தை பரப்புவதாகவோ கருதப்படும்.

## அத்தியாயம் - 3

## தெரிவிக்கப்பட்ட ஒப்புதல்

5. **எச்.ஐ.வி. பரிசோதனை அல்லது சிகிச்சை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்ட ஒப்புதல் பெறுதல்.—**

(*1*) இந்த சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டிருந்தால்,—

(*a*) எந்தவொரு நபரின் மீதும் எச்.ஐ.வி சோதனை மேற்கொள்ளப்படாது அல்லது செய்யப்பட மாட்டாது; அல்லது

(*b*) வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதை பின்பற்றி சம்பந்தப்பட்ட நபர் அல்லது அவரது பிரதிநிதிகளின் தெரிவிக்கப்பட்ட ஒப்புதலை பெற்றாலன்றி எந்தவொரு பாதுகாக்கப்பட்ட நபரையும் மருத்துவ சிகிச்சை, மருத்துவ தலையீடு அல்லது ஆராய்ச்சி போன்றவற்றிற்கு உட்படுத்த கூடாது.

(*2*) எச்.ஐ.வி சோதனைக்கு உட்படுத்தப்படும் நபர் அல்லது அவரது பிரதிநிதிகளிடமிருந்து பெறப்படும் "**தெரிவிக்கப்பட்ட ஒப்புதல்**" என்பது வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதை பின்பற்றி கொடுக்கப்படும் சோதனைக்கு முந்தைய மற்றும் சோதனை பிந்தைய ஆற்றுப்படுத்துதலை உள்ளடக்கும்.

6. **சில சந்தர்ப்பங்களில் எச்.ஐ.வி. பரிசோதனை அல்லது சிகிச்சை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டு ஒப்புதல் பெற அவசியம் இல்லை**.— தெரிவிக்கப்பட்ட ஒப்புதல் கீழ்க்கண்டவற்றின் போது தேவைப்படாது:---

*(a)* ஒரு நீதிமன்றத்தின் ஆணையின் படி முடிவெடுக்கப்பட்டு, மருத்துவ பரிசோதனையின் ஒரு பகுதியாகவோ அல்லது நீதிமன்றத்தின் முன்பு உள்ள ஒரு வழக்கின் முடிவை தீர்மானிக்கவோ தேவைப்படும் எனின் எந்த நபருக்கும் எச்.ஐ.வி. பரிசோதனை செய்யலாம்;

*(b)* மருத்துவ ஆராய்ச்சி அல்லது சிகிச்சையில் பயன்படுத்துவதற்கு பயன்படும் மனித உடல் அல்லது திசுக்கள், இரத்தம், விந்து போன்ற உடல் பிற திரவங்கள் உள்ளிட்டவை எந்தவொரு பகுதியையும் சேகரித்தல், பதப்படுத்துதல், விநியோகம் செய்தல் அல்லது பயன்படுத்துதல்;

ஆனால், தானம் கொடுப்பவர் பரிசோதனையின் முடிவை பெற விரும்பினால், தானம் வழங்குவதற்கு முன்னர், எச்.ஐ.வி. பரிசோதனைக்கு முந்தைய மற்றும் பரிசோதனைக்கு பிந்தைய ஆற்றுப்படுத்துதலுக்காக அதற்காக உள்ள மையத்திற்க்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தாலன்றி, அந்த பரிசோதனையின் முடிவை அந்த நபருக்கு தர முடியாது.

*(c)* ஒருவரின் எச்.ஐ.வி. நிலையை அறியும் நோக்கில் செய்யப்படாத வண்ணமும், எச்.ஐ.வி. பரிசோதனை செய்பவரின் பெயர் அறியாமல் செய்யப்படும் தொற்றுநோயியல் ஆய்வு அல்லது கண்காணிப்பு நோக்கங்களுக்காக செய்யப்படும் பரிசோதனைகள்:

ஆனால், எச்.ஐ.வி. பரிசோதனை செய்பவரின் பெயர் அறியாமல் செய்யப்படும் தொற்றுநோயியல் ஆய்வு அல்லது கண்காணிப்பு நோக்கங்களுக்காக செய்யப்படும்

எச்.ஐ.வி. பரிசோதனைகள் இவற்றின் விவரங்கள் சம்பந்தப்பட்ட நபருக்கு தெரிந்திருக்க வேண்டும்; மற்றும்

(*d*) உரிமம் பெற்ற இரத்த வங்கியில் பரிசோதனை நோக்கத்திற்க்காக.

**7. பரிசோதனை மையங்கள் போன்றவற்றிக்கான வழிகாட்டு நெறிமுறைகள்**:-- வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை பின்பற்றினாலன்றி எந்தவொரு சோதனை மையமோ அல்லது நோயறிதல் மையமோ அல்லது நோயியல் ஆய்வகமோ அல்லது இரத்த வங்கியோ எவ்வித எச்.ஐ.வி. பரிசோதனையையும் செய்யக்கூடாது அல்லது நடத்தப்படாது.

## அத்தியாயம் - 4

## எச்.ஐ.வி. நிலையை வெளிப்படுத்துதல்

**8. எச்.ஐ.வி. நிலையை வெளிப்படுத்துதல்**.—(*1*) நிகழ்க்காலத்தில் நடைமுறையில் உள்ள மற்ற பிற சட்டங்களில் இவற்றை பற்றி குறிப்பிடப்பட்டிருந்தாலும்,—

(*i*) ஒரு நீதிமன்றத்தின் முன்பு உள்ள ஒரு வழக்கில் நீதித்தீர்ப்பு கொடுப்பதற்க்கு ஏதுவாக ஒரு நீதிமன்றத்தின் ஆணையின் படி மட்டுமேயன்றி எந்தவொரு நபரையும் தனது எச்.ஐ.வி. நிலையை வெளிப்படுத்தும் படி நிர்பந்திக்க கூடாது;

பிரிவு 5-ல் குறிப்பிடப்பட்டுள்ளது போல், சூழ்நிலைக்கு ஏற்றதாவோ, சம்பந்தப்பட்ட நபர் அல்லது அவரது பிரதிநிதிகளின் தெரிவிக்கப்பட்ட ஒப்புதலை, எழுத்துப்பூர்வமாக அந்த நபராலே பதிவு செய்யப்பட்டாலன்றி, பிறரிடம் நம்பிக்கையுடனும், நம்பகமான ஒரு உறவு தன்மையிலும் பகிர்த்துக்கொள்ளப்பட்ட எந்தவொரு நபரின் எச்.ஐ.வி. நிலை அல்லது மற்ற தனிப்பட்ட தகவலை வெளிப்படுத்தவோ அல்லது வெளிப்படுத்த நிர்ப்பந்திக்கவோ கூடாது:

ஆனால், நம்பகமான ஒரு உறவு தன்மையிலுள்ள ஒரு சூழ்நிலையில், தெரிவிக்கப்பட்ட ஒப்புதலை எழுத்துப்பூர்வமாக பதிவு செய்யப்பட வேண்டும்.

(2) உட்பிரிவு (I)-ல் உட்கூறு (ii)-ன் படி எச்.ஐ.வி. தொடர்பான தகவலை வெளிப்படுத்த கீழ்க்கண்ட நிலையில் தெரிவிக்கப்பட்ட ஒப்புதல் அவசியம் இல்லை----

*(a)* ஒரு நபருக்கு பராமரிப்பு அல்லது சிகிச்சையை வழங்க அவரின் எச்.ஐ.வி. நிலையை வெளிப்படுத்தல் அவசியமென்றால், ஒரு சுகாதார வழங்குநர், பராமரிப்பு, சிகிச்சை அல்லது ஆலோசனை வழங்கும் மற்றொரு சுகாதார வழங்குநருக்கு வழங்கலாம்;

*(c)* ஒரு நீதிமன்றத்தின் முன்பு உள்ள ஒரு வழக்கில் நீதித்தீர்ப்பு கொடுப்பதற்க்கு அவசியம் என்றாள் ஒரு நீதிமன்றத்தின் ஆணையின் படி அந்த நபரின் எச்.ஐ.வி. நிலையை வெளிப்படுத்தல் நீதிமன்றத்தில் செய்யலாம்.

*(d)* இரு நபர்களுக்கிடையே உள்ள வழக்குகள் மற்றும் சட்ட நடவடிக்கைகளில், அத்தகைய வழக்குகள் மற்றும் சட்ட நடவடிக்கைகளை குறித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய அல்லது அவர்களின் வழக்கறிஞருக்கு அறிவுறுத்த, ஒரு நபரின் எச்.ஐ.வி. நிலையை வெளிப்படுத்தல்;

*(e)* பிரிவு 9-ன் கீழுள்ள விதிகளின் படி தேவைப்படுகின்ற;

*(e)* ஒரு நபரின் புள்ளிவிவர அல்லது பிற தகவல் தொடர்பானதாக அவரின் எச்.ஐ.வி. நிலை இருந்து, அந்த நபரை அடையாளம் காணப்படுவதற்கு வழிவகுக்க முடியாத நிலையில் இருந்தால்; மற்றும்

*(f)* சூழ்நிலைக்கு ஏற்ற வண்ணம், கண்காணிப்பு, மதிப்பீடு அல்லது மேற்பார்வைக்கான போன்ற நோக்கங்களுக்காக மத்திய அரசு அல்லது மாநில

அரசு அல்லது மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்தின் அலுவலர்களுக்கு தேவைப்படின்.

**9. எச்.ஐ.வி-யுள்ள நபரின் எச்.ஐ.வி. நிலையை அவரின் துணையாளிக்கு வெளிப்படுத்துதல்.**—

(*1*) ஒரு மருத்துவர் அல்லது ஆற்றுப்படுத்துநரை தவிர, எந்த சுகாதார வழங்குநரும் ஒரு நபரின் எச்.ஐ.வி. நிலையை அவரின் துணையாளிக்கு வெளிப்படுத்துதல் கூடாது.

(*2*) மருத்துவர் அல்லது ஆற்றுப்படுத்துநர் போன்ற ஒரு சுகாதார வழங்குநர், தனது நேரடி கண்காணிப்பில் இருக்கும் ஒரு நபரின் எச்.ஐ.வி. நிலையை அவரின் துணையாளிக்கு வெளிப்படுத்துதல் செய்யலாம். ஆனால், அந்த சுகாதார வழங்குநர்—

(*a*) அத்தகைய நபரிடம் இருந்து எச்.ஐ.வி பரவுவதில் அவரது துணையாளிக்கு குறிபிடத்தக்க ஆபத்து இருப்பதாக நியாயமாக நம்பினால்;

(*b*) அத்தகைய எச்.ஐ.வி. தொற்றுள்ள நபருக்கு தனது துணையாளிக்கு வெளிப்படுத்தல் செய்வதை பற்றி சரியான முறையில் ஆற்றுப்படுத்தபட்டிருந்தால்; மற்றும்

(*c*) அத்தகைய எச்.ஐ.வி. தொற்றுள்ள நபர் தனது துணையாளிக்கு வெளிப்படுத்தல் செய்யமாட்டார் என நம்பினால்; மற்றும்

(*d*) எச்.ஐ.வி. நிலையை அவரது துணையாளிக்கு வெளிபடுத்துதல் செய்ய போவதாக தனது எண்ணத்தை எச்.ஐ.வி. தொற்றுள்ள நபரிடம் முன்பே தெரிவித்திருந்தால்;

ஆனால், எச்.ஐ.வி. தொற்றுள்ள நபரின் துணையாளிக்கு சரியான ஆற்றுப்படுத்தல் செய்த பிறகே வெளிப்படுத்துதல் செய்ய முடியும்:

ஆனால், எச்.ஐ.வி. தொற்றுள்ள நபரின் துணையாளியின் இருப்பிடத்தை கண்டுபிடிப்பதோ அல்லது துணையாளியை அடையாளம் காண்பதோ சுகாதார வழங்குநரின் பொறுப்பல்ல:

ஆனால், ஒரு எச்.ஐ.வி. தொற்றுள்ள பெண்ணின் துணையாளியிடம் வெளிப்படுத்துதல் செய்தால் அப்பெண்ணிற்க்கும், அவளுடைய பிள்ளைகளுக்கும், அவளுடைய உறவினர்களுக்கும் அல்லது அவளின் நெருக்கமானவர்களுக்கும் எதிராக வன்முறை, கைவிடல் அல்லது உடல், மன, ஆரோக்கியம் அல்லது பாதுகாப்பின் மீது கடுமையான எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் என நியாயமான அச்சம் இருந்தால், சுகாதார வழங்குநர் அப்பெண்ணின் எச்.ஐ.வி. நிலையை அவரது துணையாளிக்கு வெளிபடுத்துதல் செய்ய கூடாது.

(3) துணை பிரிவு (1) கீழ் ஒரு துணையாளிக்கு எச்.ஐ. வி தொடர்பான இரகசிய தகவலை வெளிப்படுத்தல் அல்லது வெளிப்படுத்தாதல் போன்றவற்றால் சுகாதார வழங்குநர் எந்தவொரு குற்றவியல் அல்லது சிவில் நடவடிக்கைக்கும் உட்படுத்தப்பட மாட்டார்.

**10. எச்.ஐ.வி. பரவலை தடுப்பதற்க்கான கடமை.**— எச்.ஐ.வி. மற்றும் அதன் பரவுதல் தொடர்பாக வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை பின்பற்றி ஆற்றுப்படுத்தப்பட்ட ஒவ்வொரு எச்.ஐ.வி. தொற்றுள்ள நபரும், பிற நபர்களுக்கு எச்.ஐ.வி. பரவுதலை தடுக்க அனைத்து நியாயமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். ஆபத்தை குறைப்பதற்கான உத்திகளை ஏற்றுக்கொள்வது அல்லது பாலியல் தொடர்பு தொடங்குவதற்க்கு அல்லது ஊசி பரிமாற்றம் செய்வதற்க்கு முன் கூட்டியே தனது எச்.ஐ.வி. நிலையை தனது கூட்டாளிக்கு தெரியப்படுத்துவது போன்றவை இந்நடவடிக்கைகளில் அடங்கும்:

ஆனால், ஒரு பெண்ணிற்க்கும், அவளுடைய பிள்ளைகளுக்கும், அவளுடைய உறவினர்களுக்கும் அல்லது அவளின் நெருக்கமானவர்களுக்கும் எதிராக வன்முறை, கைவிடல் அல்லது உடல், மன, ஆரோக்கியம் அல்லது பாதுகாப்பின் மீது கடுமையான எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் என நியாயமான அச்சம் இருந்தால், ஒரு பெண்கள் விஷயத்தில் பாலியல் தொடர்பு மூலம் பரவுதலை தடுப்பதிற்க்கு இந்த பிரிவின் விதிகள் பொருந்தாது.

## அத்தியாயம் - 5

## நிறுவனங்களின் கடமைகள்

**11. தகவல்களின் இரகசியத்தன்மை.**— பாதுகாக்கப்பட்ட நபர்களின் எச்.ஐ.வி. தொடர்பான தகவலின் பதிவுகளை வைத்திருக்கும் ஒவ்வொரு நிறுவனமும் அத்தகைய தகவல்கள் வெளிப்படுத்தபடுதலிருந்து பாதுகாக்கப்படுவதை உறுதி செய்ய, அதற்கான வழிகாட்டுதல் நெறிமுறைகளுக்கு ஏற்ப தரவு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்;

விளக்கம்— இந்த பிரிவின் நோக்கத்தின் படி, வெளிப்படுத்தபடுதலிருந்து தகவலைப் பாதுகாப்பதற்கான நடைமுறைகள், தகவலை அணுகுவதற்கான நடைமுறைகள், பாதுகாப்பு அமைப்புகளுக்கான ஏற்பாடு போன்றவற்றை உள்ளடக்கியதே தரவு பாதுகாப்பு நடவடிக்கைகள். எந்தவொரு வடிவத்திலும் வழிமுறையிலும் தகவல்கள் சேமிக்கப்படவும், நிறுவனத்தில் உள்ள நபர்களின் பொறுப்புடைமை மற்றும் கடன்பாட்டை உறுதி செய்வதும் இப்பிரிவின் நோக்கமாகும்.

**12. நிறுவனங்களுக்குரிய எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் கொள்கை.**— நிறுவனங்களுக்கான எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் கொள்கையை, ஒரு குறிப்பிட்ட முறையில், பரிந்துரைக்கப்பட்ட வகையில், மத்திய அரசு அறிவிக்க வேண்டும்

# அத்தியாயம் - 6

## எச்.ஐ.வி.யோடு வாழ்பர்களுக்கான கூட்டு மருந்து சிகிச்சை முறை மற்றும் சந்தர்ப்பவாத நோய்தோற்றுகளின் மேலாண்மை

**13. மத்திய அரசு மற்றும் மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.**—எச்.ஐ.வி அல்லது எய்ட்ஸ் பரவுவதை தடுக்க தேவையான மற்றும் விரைவான நடவடிக்கைகளை வழிகாட்டு நெறிமுறைகளுக்கு ஏற்ப மத்திய அரசு மற்றும் ஒவ்வொரு மாநில அரசும் எடுக்க வேண்டும்,

**14. மத்திய, மாநில அரசுகளால் மேற்கொள்ளப்படும் கூட்டு மருந்து சிகிச்சை முறை மற்றும் சந்தர்ப்பவாத நோய்தோற்றுகளின் மேலாண்மை.**—

(*1*) பிரிவு 13-ன் கீழ் மத்திய அரசு அல்லது மாநில அரசால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்பவை, கூடிய மட்டும், எச்.ஐ.வி அல்லது எய்ட்ஸ் தொடர்பான தொற்று கண்டறியும் வசதிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுப்பது, எச்.ஐ.வி தொற்று அல்லது எய்ட்ஸ் நோயோடு வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு கூட்டு மருந்து சிகிச்சை தருவது மற்றும் சந்தர்ப்பவாத நோய்களை கட்டுப்படுத்துவதற்க்கான மேலாண்மை உருவாக்குவது போன்றவற்றை உள்ளடக்கியது ஆகும்.

(*2*) அனைத்து நபர்களுக்கும் பொருந்தும் தொற்று கண்டறியும் வசதிகள், கூட்டு மருந்து சிகிச்சை, மற்றும் சந்தர்ப்பவாத நோய்களை கட்டுப்படுத்துவதற்க்கான மேலாண்மை போன்றவற்றை உள்ளடக்கிய எச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸ் பற்றிய தேவையான நெறிமுறைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய அரசு வெளியிட வேண்டும். இத்தகவல்கள் அனைத்து மக்களுக்கும் பரவலாக சென்றடைவதை உறுதிப்படுத்த வேண்டும்.

## அத்தியாயம் - 7

## மத்திய அரசு மற்றும் மாநில அரசு மேற்கொள்ளும் நலத்திட்ட நடவடிக்கைகள்

15. **மத்திய அரசு மற்றும் மாநில அரசு மேற்கொள்ளும் நலத்திட்ட நடவடிக்கைகள்**.—(*1*) எச்.ஐ.வி அல்லது எய்ட்ஸ் தொற்றுடைய அல்லது பாதிக்கப்பட்ட நபர்கள் சமூகநல திட்டங்களை அணுகி பெற மத்திய அரசு மற்றும் ஒவ்வொரு மாநில அரசும் சிறந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்

(*2*) துணை பிரிவு (1)-ல் உள்ள விதிகளில் எந்த பாரபட்சமும் இல்லாமல், மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் அனைத்து பாதுகாக்கப்பட்ட நபர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய திட்டங்களை உருவாக்க வேண்டும்.

16. **எச்.ஐ.வி. அல்லது எயிட்ஸால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளின் சொத்துகளை பாதுகாப்பது**.—(*1*) சூழ்நிலைக்கு ஏற்றாற்போல், எச்.ஐ.வி அல்லது எய்ட்ஸ் தோற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் சொத்தை பாதுகாக்க சரியான நடவடிக்கைகளை மத்திய அரசு அல்லது மாநில அரசு எடுக்க வேண்டும்

(*2*) எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள், அல்லது அவர்களின் நலன்களை பாதுகாக்கும் நபர் அல்லது எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் மூலம் பாதிக்கப்பட்ட குழந்தை, அத்தகைய குழந்தையின் சொத்து உரிமைகள் தொடர்பான ஆவணங்களை பாதுகாத்து வைக்க, அத்தகைய குழந்தை துஷ்பிரயோகம் செய்யப்படுவதைப் பற்றி புகார் செய்ய, அத்தகைய குழந்தையின் வீட்டிற்குள் நுழைந்து உண்மையான துஷ்பிரயோகம் அல்லது அத்துமீறல்கள் செய்வதை தெரிவிக்க குழந்தைகள் நல குழுவை அணுகலாம்

**விளக்கம்**— இப்பிரிவின் நோக்கத்தின் படி, “குழந்தைகள் நல குழு” என்றால் இளஞ்சீறார் சீர்த்திருத்த (சிறுவர் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2000 பிரிவு 56-ன் கீழ் அமைக்கப்பட்ட ஒரு குழு ஆகும்.

**17. எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் குறித்த தகவல், கல்வி மற்றும் தகவல்தொடர்பு திட்டங்களை பரவலாக்கல்.**— வயதிர்கேற்றாற்போல், பாலின உணர்திறன் பகுப்பாய்வுடன் கூடிய, கறைபடித்தல் இல்லாத மற்றும் பாகுபாடு இல்லாத, எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் தொடர்பான தகவல், கல்வி மற்றும் தகவல் தொடர்பு திட்டங்களை மத்திய அரசு மற்றும் மாநில அரசு உருவாக்க வேண்டும்

**18. எச்.ஐ.வி. அல்லது எயிட்ஸ் தொற்றுடைய பெண்கள் மற்றும் குழந்தைகள்.**—

(*1*) எச்.ஐ.வி அல்லது எய்ட்ஸ் தோற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் பராமரிப்பு, ஆதரவு மற்றும் சிகிச்சைக்காக மத்திய அரசு வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்க வேண்டும்.

(*2*) துணை பிரிவு (1)-லுள்ள விதிமுறைகளின் பொதுவான தன்மைக்கு பாரபட்சம் இல்லாமல், தற்போது அமலில் இருக்கும் சட்டங்கள் உள்ள போதிலும், சூழ்நிலைக்கு ஏற்றாற்போல், மத்திய அரசு அல்லது மாநில அரசு, எச்.ஐ.வி தொற்றுடைய பெண்களுக்கு கருத்தரிப்பு மற்றும் எச்.ஐ.வி. தொடர்பான சிகிச்சையின் விளைவு பற்றிய ஆலோசனை மற்றும் தகவல்களை வழங்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

(*3*) எச்.ஐ.வி. தோற்றுடைய கர்ப்பவதி பெண்ணின் தெரிவிக்கப்பட்ட ஒப்புதல் பெறாமல், கருத்தடை அல்லது கருக்கலைப்புக்கு உட்படுத்தப்பட மாட்டார்.

## அத்தியாயம் - 8

## பாதுகாப்பான பணி சூழல்

**19. பாதுகாப்பான பணி சூழல் அளிப்பது நிறுவனங்களின் கடமை**.— சுகாதார சேவைகளில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு நிறுவனமும் மற்றும் எச்.ஐ.வி. தொற்று பெறுவதற்க்கு கணிசமான ஆபத்தும் தொழில்முறை வெளிப்பாடும் உடைய நிறுவனங்களும், பாதுகாப்பான சூழலை உறுதிப்படுத்துவதற்கான நோக்கத்தை கொண்டு கீழ்க்கண்டவற்றை உறுதி செய்யலாம்,---

(*i*) வழிகாட்டு நெறிமுறைகளுக்கு ஏற்ப கீழ்க்கண்டவற்றை வழங்க வேண்டும்,—

(*a*) பணி நிமித்தமாக எச்.ஐ.வி. தோற்று பெறுவதற்க்கு அபாயம் உள்ள எல்லா நிறுவனங்களும் தங்கள் நிறுவனங்களில் பணியாற்றும் எல்லா நபர்களுக்கும் உலகளாவிய முன்னெச்சரிக்கைகள் விதிகள்; மற்றும்

*(b)* உலகளாவிய முன்னெச்சரிக்கைகள் விதிகளை பயன்படுத்த தேவையான பயிற்சிகள்;

(*c*) பணியில் எச்.ஐ.வி. அல்லது எயிட்ஸ் தோற்று பெறுவதற்க்கு அபாயம் உள்ள அந்நிறுவனத்தின் எல்லா பணியாளருக்கும் பிந்தைய வெளிப்பாட்டின் தடுப்பு மருந்து (Post Exposure Prophylaxis) அளிக்க வேண்டும்

(*ii*) உலகளாவிய முன்னெச்சரிக்கைகள் விதிகள் மற்றும் பிந்தைய வெளிப்பாட்டின் தடுப்பு மருந்து (Post Exposure Prophylaxis) போன்றவை நிறுவனத்தில் கிடைக்கும் தகவலை எல்லா நபர்களுக்கும் தெரிவித்து அதனை பற்றிய கல்வியை அளிக்க வேண்டும்.

**20. நிறுவங்களின் பொதுவான பொறுப்பு**.—

(*1*) இந்த அத்தியாயத்தில் உள்ள அனைத்து விதிகளும் ஒரு தொழிலாளி அல்லது அதிகாரி அல்லது உறுப்பினர் அல்லது இயக்குனர் அல்லது அறங்காவலர் அல்லது மேலாளர் என்ற வித்தியாசமின்றி நூறு தொழிலாளர்களுக்கு மேல் உள்ள அனைத்து நிறுவனங்களுக்கும், சூழ்நிலைக்கு ஏற்றார்ப்போல், பொருந்தும்:

ஆனால், சுகாதார நல நிறுவனங்களுக்கு, "நூறு தொழிலாளர்களுக்கு மேல் உள்ள" என்றுள்ள இந்த உட்பிரிவின் விதிகள், "இருபது தொழிலாளர்களுக்கு மேல் உள்ள" நிறுவனங்கள் என்று சொல்மாறுதல் செய்யப்படுகிறது.

(2) உட்பிரிவு (1)-ல் குறிப்பிட்டுள்ள படி, நிறுவனங்களில் பொறுப்பில் உள்ள ஒவ்வொரு நபரும், அந்த நிறுவனத்தின் நடவடிக்கைகளுக்கு ஏற்ப, இந்த சட்டத்திலுள்ள விதிகளை கடைபிடிப்பதை உறுதி செய்ய வேண்டும்.

**21. குறைத்தீர்க்கும் நெறிமுறை**.— பிரிவு 20, உட்பிரிவு (1)-ல் குறிப்பிட்டுள்ள படி, ஒவ்வொரு நிறுவனமும், தனக்கு பொருந்தும் வகையில், ஒரு புகார் அலுவலரை நியமிக்க வேண்டும். அவர் அந்நிறுவனத்தில், இந்த சட்டத்தின் விதிகள் மீறப்படும் போது உரிய நேரத்திற்க்குள் இச்சட்ட விதிமுறைகளுக்கேற்ப சரியான முறையில் புகார்களை விசாரித்து தீர்க்க வேண்டும்.

## அத்தியாயம் - 9

## ஆபத்துகளை குறைக்க கையாளப்படும் உத்திகளை பரவலாக்கல்

**22. ஆபத்துகளை குறைக்க கையாளப்படும் உத்திகள்**.— தற்போது அமலில் இருக்கும் சட்டங்களில் இருந்தபோதிலும், மத்திய அரசால் வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறையில் குறிப்பிட்டுள்ள வகையில் நடைமுறைப்படுத்தப்படும், எச்.ஐ.வி. பரவலின் அபாயத்தை குறைக்க மேற்கொள்ளப்படும் எந்த உத்தியும், வழிமுறையும், நுட்பமும், அல்லது தனி நபர்கள், நிறுவனங்கள், அமைப்புகளால் மேற்கொள்ளப்படும் எந்த செயலும், எந்த விதத்திலும் கட்டுப்படுத்தபடவோ அல்லது தடை செய்யப்படவோ கூடாது. ஏனெனில், அது ஒரு குற்றவியல் (கிரிமினல்) குற்றம் அல்லது உரிமையியல் (சிவில்) கடன்பாடு ஆகாது.

**விளக்கம்**.— இப்பிரிவின் நோக்கத்திற்க்காக, எச்.ஐ.வி. பரவலின் அபாயத்தை குறைக்க மேற்க்கொள்ளப்படும் உத்திகள் என்றால் ஒரு நபருக்கு எச்.ஐ.வி தொற்றின் ஆபத்தை குறைக்க மேற்கொள்ளப்படும் செயல்கள் அல்லது எச்.ஐ.வி அல்லது எய்ட்ஸ் தொடர்பான பாதகமான தாக்கங்களை தணிக்க மேற்கொள்ளப்படும் நடைமுறைகளை ஊக்குவித்தல் ஆகும். இதில் உள்ளடங்குபவன:---

*(i)* எச்.ஐ.வி. தொற்றின் தடுப்பு மற்றும் பாதுகாப்பான நடைமுறைகள் தொடர்பான தகவல், கல்வி மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்க தேவையான ஒதுக்கீடுகள்;

*(ii)* ஆணுறை உள்ளிட்ட பாதுகாப்பான உடலுறவு சாதனங்களின் பயன்படுத்துதல் மற்றும் அதற்கு தேவையான ஒதுக்கீடுகள்

*(iii)* மாற்று மருந்து மற்றும் மருந்து பராமரிப்பு; மற்றும்

*(iv)* ஊசி போடுவதற்க்கு விரிவான பாதுகாப்பு தேவைகளுக்கு சரியான ஒதுக்கீடுகள்

## <u>எடுத்துக்காட்டுகள்</u>

*(a)* A என்பவர், பாலியல் தொழிலாளியான B அல்லது B-யின் வாடிக்கையாளரான C-க்கு ஆணுறைகள் தருகிறார். அவர்களின் இச்செயல்களுக்காக A-வும் சரி, பி-வும் சரி, சி-வும் சரி குற்றவியல் (கிரிமினல்) குற்றம் அல்லது உரிமையியல் (சிவில்) கடன்பாடிற்க்கு உள்ளாக மாட்டார்கள். இந்த உத்தியை நடைமுறைப்படுத்தியதற்காக அல்லது கையாண்டதிற்காக அவர்களின் செயலை தடை செய்யவோ, முட்டுக் கட்டை போடவோ, கட்டுப்படுத்தவோ, தடுக்கவோ கூடாது.

*(b)* M என்பவர், ஆணோடு ஆண் உடலுறவு கொள்ளும் ஆண்களுக்கு பாலியல் சுகாதார தகவல், கல்வி மற்றும் ஆலோசனை உள்ளடக்கிய எச்.ஐ.வி அல்லது எய்ட்ஸ் தலையீடு திட்டம் நடைமுறைப்படுத்தி N என்னும் ஆணோடு ஆண் உடலுறவு கொள்ளும் நபருக்கு பாதுகாப்பான பாலியல்

தகவல், பாலியல் கல்வி சார்ந்த பொருள் மற்றும் ஆணுறைகளை வழங்குகிறார். அவர்களின் இச்செயல்களுக்காக M-வும் சரி, N-வும் சரி, குற்றவியல் (கிரிமினல்) குற்றம் அல்லது உரிமையியல் (சிவில்) கடன்பாடிற்க்கு உள்ளாக மாட்டார்கள். இந்த தலையீடு திட்டத்தை நடைமுறைப்படுத்தியதற்காக அல்லது கையாண்டதிற்காக அவர்களின் செயலை தடை செய்யவோ, முட்டுக் கட்டை போடவோ, கட்டுப்படுத்தவோ, தடுக்கவோ கூடாது.

*(c)* X என்பவர், பதிவு செய்யப்பட்ட ஊசி பரிமாற்ற திட்ட சேவைகளை உள்ளடக்கிய எச்.ஐ.வி அல்லது எய்ட்ஸ் தலையீடு திட்டத்தின் மூலம், ஊசி மூலம் போதைப்பொருள் பயன்படுத்தும் நபர்களில் ஒருவரான Y-க்கு சுத்தமான ஊசியாய் கொடுத்து பின் Y-யிடமிருந்து பயன்படுத்தப்பட்ட ஊசியை X திரும்ப பெறுகிறார். அவர்களின் இச்செயல்களுக்காக X-வும் சரி, Y-வும் சரி, குற்றவியல் (கிரிமினல்) குற்றம் அல்லது உரிமையியல் (சிவில்) கடன்பாடிற்க்கு உள்ளாக மாட்டார்கள். இந்த தலையீடு திட்டத்தை நடைமுறைப்படுத்தியதற்காக அல்லது கையாண்டதிற்காக அவர்களின் செயலை தடை செய்யவோ, முட்டுக் கட்டை போடவோ, கட்டுப்படுத்தவோ, தடுக்கவோ கூடாது.

*(d)* D என்பவர், மாற்று அபின் சிகிச்சை (OST) எனப்படும் சிகிச்சையை, எச்.ஐ.வி அல்லது எய்ட்ஸ் தலையீடு திட்டத்தின் மூலம், ஊசி மூலம் போதைப்பொருள் பயன்படுத்தும் நபரான E-க்கு நிர்வகிக்கிறார். அவர்களின் இச்செயல்களுக்காக D-வும் சரி, E-வும் சரி, குற்றவியல் (கிரிமினல்) குற்றம் அல்லது உரிமையியல் (சிவில்) கடன்பாடிற்க்கு உள்ளாக மாட்டார்கள். இந்த தலையீடு திட்டத்தை நடைமுறைப்படுத்தியதற்காக அல்லது கையாண்டதிற்காக அவர்களின் செயலை தடை செய்யவோ, முட்டுக் கட்டை போடவோ, கட்டுப்படுத்தவோ, தடுக்கவோ கூடாது.

# அத்தியாயம் - 10

# குறைதீர்ப்பாணையர் நியமனம்

**23. குறைதீர்ப்பாணையர் நியமனம்.**—

(*1*) ஒவ்வொரு மாநில அரசும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குறைதீர்ப்பாணையரை நியமித்துக் கொள்ளலாம்.,—

(*a*) வரையறுக்கப்பட்ட தகுதி மற்றும் அனுபவங்களை கொண்டவராக; அல்லது

(*b*) குறிப்பிட்ட தரவரிசைக்கு கீழில்லாத, வரையறுக்கப்பட்ட தகுதியுடைய, தனது அதிகாரிகளை மாநில அரசு பணிமாற்று நியமனம் செய்யலாம்.

இச்சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி குறைதீர்ப்பாணையர், குறிப்பிடப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தவும் மற்றும் குறிப்பிடப்பட்ட பணிகளை ஆற்றுவதற்க்கும்.

(*2*) உட்பிரிவு (1)-லுள்ள உட்கூறு (a)-ன் படி நியமிக்கப்பட்ட குறைதீர்ப்பாணையரின் சேவை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை, மாநில அரசால் வரையறுக்கப்பட்டவைகளாக இருக்க வேண்டும்..

(*3*) ) உட்பிரிவு (1)-லுள்ள படி நியமிக்கப்பட்ட குறைதீர்ப்பாணையரின் நீதி அதிகார எல்லையை அந்த பகுதியின் அல்லது பகுதிகளின் வரையறை படி, அரசாங்க அறிவிப்பு மூலம் மாநில அரசு வரையறுக்கலாம்.

**24. குறைதீர்ப்பாணையரின் அதிகாரங்கள்.**—

(*1*) எந்த ஒரு நபராலும் புகார் அளிக்கப்பட்டவுடன், பிரிவு 3-ல் குறிப்பிட்டுள்ளபடி, பாகுபாடு மற்றும் எந்தவொரு நபருக்கும் சுகாதார சேவைகளை வழங்குதல் போன்றவை தொடர்பான செயல்களை கருத்தில் கொண்டு, மாநில அரசால்

வரையறுக்கப்பட்ட வகையில், இந்தச் சட்டத்தின் விதிமீறல்களை குறைதீர்ப்பாணையர் விசாரணை செய்ய வேண்டும்.

(*2*) எந்த ஒரு கருத்தை விசாரிக்க, குறைதீர்ப்பாணையர் தேவை என்று கருதினால், எந்த ஒரு நபரிடமிருந்தும், எந்த ஒரு விஷயத்தை அல்லது கருத்தைப் பற்றிய தகவல்களை தருவிக்கப்பட்டு பெறலாம். எந்தவொரு நபரும் இத்தகைய தகவல்களை வழங்குவதற்கு சட்டபூர்வமான கடமை உண்டு. அப்படி தர தவறினால், இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 176 மற்றும் 177 (1860 ஆம் ஆண்டின் 45) கீழ் தண்டிக்கப்பட வேண்டும்

அத்தகைய தகவல் தேவைப்படும் எந்தவொரு நபரும் சட்டபூர்வமாக கட்டாயப்படுத்தப்படுவதாக கருதப்பட வேண்டும், அவ்வாறு செய்யத் தவறிவிட்டால், இந்திய தண்டனைச் சட்டத்தின் 176 மற்றும் 177 பிரிவுகளின் (பிரிவு 45, 1860) கீழ் தண்டிக்கப்படுவார்.

(*3*) மாநில அரசால் வரையறுக்கப்பட்ட முறை படி, குறைதீர்ப்பாணையர் ஆவண பதிவுகளை பராமரிக்க வேண்டும், பிரிவு 24, உட்பிரிவு (1)-ன் படி, புகார்களை

**25. புகார் அளிப்பதின் வழிமுறை**.— மாநில அரசால் வரையறுக்கப்பட்ட முறை படி, பிரிவு 24, உட்பிரிவு (1)-ன் படி புகார்களை குறைதீர்ப்பாணையரிடம் அளிக்க வேண்டும்.

**26. குறைதீர்ப்பாணையரின் ஆணைகள்.**— பிரிவு 24, உட்பிரிவு (1)-ன் படி பெறப்பட்ட புகார்களின் மீது, இரு வாதிகளின் வாதங்களுக்கும் செவிமடுக்க வாய்ப்பளித்து விட்டு, புகார் பெற்ற முப்பது நாட்களுக்குள், குறைதீர்ப்பாணையரின் பொருத்தமான கருத்திற்கேர்ப்ப, காரணங்களை விவரித்து, தகுந்த ஆணையை பிறப்பிக்கலாம்.

ஆனால், மருத்துவ அவசரநிலையில் உள்ள எச்.ஐ.வி. தொற்றுள்ள நபருக்கு, உடனடியாக, கூடிய மட்டும் புகாரை பெற்ற இருபத்தி நான்கு மணி நேரத்தில் , குறைதீர்ப்பாணையர் தகுந்த ஆணையை பிறப்பிக்கலாம்.

27. **குறைதீர்ப்பாணையருக்கு உதவிபுரியும் அதிகாரிகள்.**— பிரிவு 23-ன் படி நியமிக்கப்பட்ட குறைதீர்ப்பாணையருக்கு, தனது ஆணையை நிறைவேற்ற, அப்பகுதியில் செயல்படும் சிவில் அதிகாரிகள் உட்பட அனைத்து அதிகாரிகளும் உதவிப்புரிய வேண்டும்.

28. **மாநில அரசுக்கு அளிக்கப்படும் அறிக்கை.**— பெறப்பட்ட புகார்களின் எண்ணிக்கை, தன்மை, நடவடிக்கை எடுத்த விவரம், புகார்களின் மேல் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் போன்றவற்றை உள்ளடக்கிய அறிக்கையை ஒவ்வொரு ஆறு மாதத்திற்க்குப் பின், மாநில அரசிற்க்கு சமர்பிக்க வேண்டும். மேலும், குறைதீர்ப்பாணையரின் வலைதளத்தில் இந்த அறிக்கையை பிரசுரிக்க வேண்டும். மேலும், அவ்வறிக்கையின் நகலை மத்திய அரசிற்க்கு அனுப்ப வேண்டும்.

## அத்தியாயம் - 11

## சிறப்பு விதிகள்

**29. இருப்பிட உரிமை**.— ஒவ்வொரு பாதுகாக்கப்பட்ட நபரும் பகிரப்பட்ட இருப்பிடத்தில் வசிக்கும் உரிமையை பெறுகிறார். பகிரப்பட்ட இருப்பிடம், அதன் ஒரு பகுதி போன்றவற்றிலிருந்து விலக்கி வைக்கா உரிமையையும் பெறுகிறார். மேலும், அந்த பகிரப்பட்ட இருப்பிடத்தை ஆண்டு அனுபவிக்கும் உரிமையும், அந்த பகிரப்பட்ட இருப்பிடத்தில் உள்ள எல்லா வசதிகளையும் பாகுபாடில்லாத முறையில் பயன்படுத்தும் உரிமையையும் பெறுகிறார்.

**விளக்கம்**.— இப்பிரிவின் நோக்கப்படி, "பகிரப்பட்ட இருப்பிடம்" என்ற சொற்றொடரின் பொருள் என்னவென்றால், ஒரு நபர் தான் வாழும் இருப்பிடம் அல்லது தனது வாழ்வின் ஏதாவது ஒரு நிலையில் தனது வீட்டு உறவுகளுடன் தனித்தோ அல்லது வேறு ஒரு நபரோடோ வாழ்ந்த இடமாகும். இந்த இருப்பிடம், தனியாக அல்லது கூட்டாக சொந்தமாக அல்லது வாடகைக்காக எடுக்கப்பட்ட இருப்பிடமாக இருக்கலாம்; மேலும், ஒரு கூட்டு குடும்பத்தின் உறுப்பினராக இருந்து, சேர்ந்தோ அல்லது தனியாகவோ, தன் மீதோ அல்லது வேறு ஒருவரின் மீதோ பதியப்பட்ட இருப்பிட உரிமை, விருப்பம், பங்கு போன்றவற்றை பெற்றவராக இருக்கலாம்; அல்லது ஒரு கூட்டு குடும்பத்தின் உறுப்பினராக இருந்து, தன் மீதும் இல்லாமல் அல்லது தன்னோடு தங்குபவரின் மீதும் இல்லாமல் வேறொரு நபரின் மேல் இருப்பிட உரிமை, விருப்பம், பங்கு போன்றவை பதியப்பட்டதாக இருப்பிடமாக இருக்கலாம்;

**30. திருமணத்திற்கு முன் எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் குறித்த தகவல், கல்வி மற்றும் தகவல்தொடர்பு**.— திருமணத்திற்கு முன் எச்.ஐ.வி. தொடர்பான தகவல், கல்வி, தகவல்தொடர்பு போன்றவற்றை அளிப்பதன் வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய அரசு உருவாக்கி அதன் பெரிய அளவிலான தகவல்பரவலை உறுதி செய்ய வேண்டும்.

**31. அரசின் பாதுகாப்பு அல்லது காவலில் உள்ள நபர்கள்**.—

(*1*) அரசின் பாதுகாவலில் அல்லது காவலில் உள்ள ஒவ்வொரு நபருக்கும் அதற்கேற்ற வழிகாட்டு நெறிமுறைகளின் படி எச்.ஐ.வி. தடுப்பு, ஆலோசனை, சோதனை மற்றும் சிகிச்சை சேவைகள் ஆகியவற்றை பெறும் உரிமை உண்டு.

(*2*) இப்பிரிவின் நோக்கப்படி, அரசின் பாதுகாவலில் அல்லது காவலில் உள்ள ஒவ்வொரு நபர் என்பவர், குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்டு தண்டனையை அனுபவித்து கொண்டிருப்பவர்; விசாரணைக்காக காத்துக்கொண்டிருப்பவர்; தடுப்பு காவல் சட்டப்படி கைது செய்யப்பட்டவர்; இளஞ்சீறார் சீர்த்திருத்த (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2000 (பிரிவு 56, 2000) படியும் நெறியில்லா கடத்தல் (தடுப்பு) சட்டம், 1956 (பிரிவு 104, 1956) அல்லது வேறு பிற சட்டங்களின் அடிப்படையில் அரசின் பாதுகாவலில் அல்லது காவலில் உள்ள நபர்கள்; அரசு நடத்தும் வீடுகள் மற்றும் தங்குமிடங்களில் அரசின் பாதுகாவலில் அல்லது காவலில் உள்ள நபர்கள் ஆவர்.

**32. மூத்த உடன்பிறப்பிற்கு பாதுகாவலருக்கான அங்கீகாரம்.**—

நிகழ்காலத்தில் நடைமுறையில் இருக்கும் வேறு எந்த சட்டத்தில் இருப்பினும், பதினெட்டு வயதிற்க்கு கீழுள்ள ஆனால் பனிரெண்டு வயதிற்க்கு மேலுள்ள, போதுமான புரிதலுடன் கூடிய முதிர்ச்சி உள்ள, எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸால் பாதிக்கப்பட்ட குடும்பத்தின் காரியங்களை நிர்வகிக்கிற, பதினெட்டு வயதிற்க்கு கீழுள்ள உடன்பிறந்த சகோதர சகோதரிகளுக்கு கீழ்க்கண்ட நோக்கத்திற்க்காக பாதுகாவலராக இருக்க போதுமான ஆற்றல் வாய்ந்தவராக கருதப்படுவார்;:—

(*a*) கல்வி நிலையங்களில் சேர்க்கை பெறதல;

(*b*) பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு;

(*c*) சிகிச்சை;

(*d*) வங்கி கணக்குகளை இயக்குதல்;;

(*e*) சொத்தை நிர்வகித்தல்; மேலும்

(*f*) பாதுகாவலருக்கான தனது கடமைகளை நிறைவேற்ற தேவைப்படுகின்ற வேறு சில நோக்கங்களுக்காக.

<u>**விளக்கம்**</u>.— இப்பிரிவின் நோக்கப்படி, எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸால் பாதிக்கப்பட்ட குடும்பம் என்றால், தனது இரு பெற்றோரும் மற்றும் சட்ட பூர்வமான பாதுகாவலரும் எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் தொடர்பான நோயால் பாதிக்கப்பட்டு முற்றிலுமாக ஆற்றலை இழந்து, தங்களது குழந்தைகளுக்கு தங்களுடைய கடமையை ஆற்ற முடியாமல் போனவர்களை கொண்டுள்ள குடும்பமாகும்.

**33. நடைமுறையிலுள்ள உயிலுக்கு பாதுகாவலர் நிலை மற்றும் விருப்ப ஆவண பாதுகாவலர் நிலை**.— (*1*) நிகழ்காலத்தில் நடைமுறையில் இருக்கும் வேறு எந்த சட்டத்தில் இருப்பினும், எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸால் பாதிக்கப்பட்ட பெற்றோரும் மற்றும் சட்ட பூர்வமான பாதுகாவலரும், ஒரு உயிலை எழுதி, சட்ட வயது நிரம்பிய தங்களுடைய உறவினர் அல்லது நண்பரை அல்லது பதினெட்டு வயதிற்க்கு கீழுள்ள, எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸால் பாதிக்கப்பட்ட பெற்றோரை கொண்டுள்ள குடும்பத்தை நிர்வகிப்பவரை, தாங்கள் முழுவதுமாக உடல் ஆற்றல் இழந்தவுடனேயோ அல்லது அந்த பெற்றோர் அல்லது சட்டபடியான பாதுகாவலரின் மரணத்தின் பின்போ, அல்லது சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் சட்டபடியான பாதுகாவலராக ஆக்கலாம்.

(*2*) அப்படியே, அந்த பெற்றோரோ அல்லது சட்டபடியான பாதுகாவலரோ தங்களது உடல் ஆற்றலை எப்போதாவது திரும்ப அடைந்தால், உட்பிரிவு (1)-ல் குறிப்பிட்டுள்ள பாதுகாவலர்தன்மை உடனடியாக முடிவுக்கு வந்து விடும். இப்பிரிவில் உள்ள எதுவும் அப்பெற்றோர் மற்றும் சட்ட ஆலோசகரின் உரிமையை பறித்துக் கொள்ள முடியாது.

(*3*) எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸால் பாதிக்கப்பட்ட குழந்தையின் பெற்றோர் அல்லது சட்ட பூர்வமான பாதுகாவலர், ஒரு உயிலை எழுதி, அந்த குழந்தையின் பராமரிப்பு

மற்றும் பாதுகாப்பிற்க்காகவும், அந்த குழந்தைக்கு தனது பெற்றோர் அல்லது சட்ட பூர்வமான பாதுகாவலரின் உயிலின் மூலம் மரபுரிமையாக கிடைக்க போகும் சொத்திற்காகவும் ஒரு சட்ட பாதுகாவலரை நியமிக்கலாம்

## அத்தியாயம் - 12

## நீதிமன்றத்தில் பின்பற்றப்படும் சிறப்பு நெறிமுறை

**34. அடையாளத்தை மறைத்தல்**.—(*1*) ஒரு சட்ட நடவடிக்கையில் ஒரு பாதுகாக்கப்பட்ட நபர் வாதியாகவோ அல்லது வழக்கை பதிவு செய்தவராகவோ இருந்தால், நீதிமன்றமானது, அந்த நபரின் விண்ணப்பதின் அல்லது அந்த நபரின் பேரில் வேறொருவர் பதிவு செய்த விண்ணப்பத்தின் மீது, நீதியின் மீதுள்ள அக்கறையுடன், கீழ்க்கண்ட எதாவது ஒரு அல்லது எல்லா ஆணைகளையும் பிறப்பிக்கலாம். அவையாவன:—

(*a*) சட்ட நடவடிக்கையிலோ அல்லது அதன் வேறு எதாவது ஒரு பகுதியிலோ அந்த விண்ணப்பதாரரின் அடையாளத்தை மறைத்து, அதற்கு பதிலாக ஒரு புனைபெயரை தங்களது நடவடிக்கையின் பதிவேட்டில் வரையறுக்கப்பட்ட விதத்தில் பதிந்து மேற்கொண்டு சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளலாம்;

(*b*) சட்ட நடவடிக்கையையோ அல்லது அதன் வேறு எதாவது ஒரு பகுதியையோ நிழற்படக் கருவி கொண்டு நடத்தலாம்;

(*b*) அச்சிட்டு வெளிபடுத்துவத்திலோ அல்லது வேறு வகையிலோ விண்ணப்பதாரரின் பெயர், நிலை அல்லது அடையாளம் போன்றவை வெளிப்படுதலை தடுத்தல்;

(*2*) ஒரு எச்.ஐ.வி. தோற்றுடைய நபரை குறித்த அல்லது தொடர்புடைய சட்ட நடவடிக்கையில், நீதிமன்றமானது சட்ட நடவடிக்கையை உடனே விசாரணைக்கு எடுத்து, முன்னுரிமை அடிப்படையில் தீர்ப்பளிக்க வேண்டும்.

**35. பராமரிப்பு விண்ணப்பம் / மனு.**—பாதுகாக்கபட்ட நபராலோ அல்லது அவரது சார்பாகவோ தற்சமயம் அமலில் இருக்கும் எந்த ஒரு சட்டத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்படும் பராமரிப்பு விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுக்கும் போது ஒரு இடைக்கால பராமரிப்பு தொகையை கொடுப்பத்தோடு, நீதிமன்றமானது, இறுதியாக பராமரிப்பு ஆணையை பிறப்பிக்கும் போது அந்த விண்ணப்பதாரருக்கு ஏற்பட்ட மருத்துவ செலவு மற்றும் எச்.ஐ.வி. தொடர்பாக ஏற்பட்ட மற்ற பிற செலவுகளையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

36. **தண்டனை அளித்தல்.**— தண்டனை அளிக்கும் எந்த ஆணையையும் பிறப்பிக்கும் போது, நீதிமன்றமானது, யாருக்கு எதிராக தண்டனை அளிக்கப்படுகிறதோ அந்த நபரின் எச்.ஐ.வி. தொற்றின் நிலையையும் அத்தண்டனைக்கு தொடர்புடைய முக்கிய காரணியாக கருத்தில் எடுத்துக் கொண்டு, அவருக்கு முறையான சுகாதார சேவைகள் கிடைக்கும் வகையில் அவர் வைக்கப்படும் சிறை வளாகத்தை தீர்மானிக்க வேண்டும்.

## அத்தியாயம் - 13

## அபராதங்கள்

**37. சட்ட விதிமீறலுக்கான அபராதங்கள்**.— அமலில் இருக்கும் எந்த வேறு சட்டத்தின் அடிப்படையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலும், பிரிவு 4-ல் இருக்கும் விதிகளை மீறும் எவரைக்கும் ரூபாய் ஒரு இலட்சம் வரை அபராதம் அல்லது குறைந்தபட்சம் மூன்று மாதங்கள் அதிகபட்சம் இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறை தண்டனை அல்லது இரண்டும் சேர்ந்தும் தண்டனையாக விதிக்கலாம்.

**38. குறைதீர்ப்பாணையரின் ஆணைகளை பின்பற்ற தவறியதற்கான அபராதங்கள்.**— பிரிவு 26-ல் குறிப்பிட்டுள்ளது போல், குறைதீர்ப்பாணையரின்

ஆணையை அவர் தன் ஆணையில் குறிப்பிட்டுள்ள காலக்கேடுவிற்குள் நிறைவேற்ற தவறும் நபர், ரூபாய் பத்து ஆயிரம் வரை அபராதம் செலுத்த வேண்டியிருக்கும். இந்த குறைதீர்ப்பாணையரின் ஆணையை நிறைவேற்ற தொடர்ந்து தவறும் போது, ஆணையை நிறைவேற்ற தவறிய ஒவ்வொரு நாளுக்கும் அபராதத்தை கணக்கீட்டு ரூபாய் ஐந்தாயிரம் வரை கூடுதல் அபராதம் விதிக்கலாம்.

**40. சட்ட நடவடிக்கையில் இரகசியத்தன்மையை மீறியதற்கான அபராதங்கள்.**— அமலில் இருக்கும் எந்த வேறு சட்டத்தின் அடிப்படையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலும், பாதுகாக்கப்பட்ட நபரின் எச்.ஐ.வி. தொற்றின் நிலையை, அவரிடமிருந்து நேரிடையாகவோ, நீதிமன்றத்தின் சட்ட நடவடிக்கைகளின் போதோ அறிந்துக் கொண்டு, நீதிமன்ற ஆணை அல்லது அறிவுறுத்தலை தவிர, வேறு விதத்தில் பிறருக்கு வெளிப்படுத்தும் நபருக்கு தண்டனையாக ரூபாய் ஒரு இலட்சம் வரை அபராதம் விதிக்கப்படும்.

**41. பழிவாங்கப்படுவதற்கு தடை**.— கீழ்க்கண்ட செயல்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கும் ஒரு நபருக்கோ அல்லது நபர்களுக்கோ, பாதிக்கப்பட்டதாய் கருதும் நபர், கேடு விளைவிக்க கூடாது:—

(*a*) இச்சட்டத்தின் படி புகார் அளித்தது;

(*b*) இச்சட்டத்தின் படி சட்ட நடவடிக்கையை வேறொரு நபருக்கு எதிராய் எடுத்தது;

(*c*) இச்சட்டத்தின் படி தனது அதிகாரத்தை பயன்படுத்தும் அல்லது நிறைவேற்றும் வண்ணம், அல்லது தனது பணியை ஆற்றி, தேவையான தகவல்கள் அல்லது ஆவணங்களை தருவித்து கொடுத்தது; அல்லது

(*d*) இச்சட்டத்தின் படி, சட்ட நடவடிக்கைகளின் போது சாட்சியாக தோன்றியது.

**41. குற்றங்களை விசாரிக்கும் நீதிமன்றங்கள்.**— முதல் வகுப்பு குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு குறைவான அதிகாரமுள்ள நீதிமன்றம் இச்சட்டத்திற்குட்பட்ட குற்றங்களை விசாரிக்க கூடாது.

**42. பிடியாணை தேவையில்லாத மற்றும் பிணையில் வெளிவர முடியாத படியும் உள்ள குற்றங்கள்.**— குற்றவியல் நடைமுறை விதி, 1973 (பிரிவு 2, 1974)-ல் குறிப்பிட்ட எச்செயல்களாக இருப்பினும், அதையும் தாண்டி இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா குற்றங்களும், பிடியாணை தேவையில்லாத, பிணையில் விடுப்படக்கூடிய குற்றங்களாகும்.

## அத்தியாயம் - 14

## இதர சட்டப்பிரிவுகள்

**43. இச்சட்டம் மற்ற சட்டங்களின் மீது மேலுரிமை செயல்திறனை கொண்டிருக்கும்.**— அமலில் இருக்கும் எந்த வேறு சட்டத்தினோடு முரண்பாடுகள் எதுவாக இருந்தாலும் அல்லது அமலில் இருக்கும் எந்த வேறு சட்டத்தின் படி நிறைவேற்றபட்டுகொண்டிருக்கும் வேறு பயன்பாடு இருந்தாலும், இச்சட்டத்தின் விதிகள் அனைத்தும் அவை அனைதிற்கும் மேலாக அதிகாரம் பெற்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

44. **நல்லெண்ணெத்தில் செய்யப்பட்ட செயலை பாதுகாத்தல்**.— மத்திய அரசு, மாநில அரசு, அல்லது மத்திய-மாநில அரசின் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம், மாநில அரசின் குறைதீர்ப்பாணையர் போன்றவர்களின் அதிகாரத்தை கொண்டு, நல்லெண்ணெத்தில் செய்யப்பட்ட, அல்லது இச்சட்டத்தில் கூறப்பட்டவையின் அடிப்படையில் செய்யப்பட்ட, அல்லது வேறு விதிகள் அல்லது வழிக்காட்டு நெறிமுறைகளில் கூறப்பட்டவையின் அடிப்படையில் செய்யப்பட்ட, அல்லது அச்சிடிப்பட்ட வேறு வெளியீடுகளின் அடிப்படையில் செய்யப்பட்ட எந்த

செயலுக்காகவும், மத்திய அரசு, மாநில அரசு அல்லது மத்திய-மாநில அரசின் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம், மாநில அரசின் குறைதீர்ப்பாணையர் அல்லது அரசின் எந்தவொரு உறுப்பினர் அல்லது எந்தவொரு அதிகாரி அல்லது பிற ஊழியர்கள் அல்லது நபர்கள் இவர்களுக்கு எதிராக, உரிமையியல் வழக்கு அல்லது குற்றவியல் வழக்கு அல்லது வேறு எந்த சட்டத்தின் மூலம் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க முடியாது.

45.**அதிகாரங்களை பிரதிநிதித்துவம் செய்து வழங்குதல்.**— சூழ்நிலைக்கு ஏற்றாற்போல், மத்திய அரசும், மாநில அரசும், இச்சட்டத்தில் தங்களுக்கு உள்ள அதிகாரத்தை பயன்படுத்தி, சில சூழ்நிலைகளில் மற்றும் சில நிலைமைகளில் பொது அல்லது சிறப்பு விதிகளின் படி, அரசின் கீழுள்ள அதிகாரிகள் அல்லது குறிப்பிட்ட இடத்தின் அதிகாரிகளுக்கு தனது அதிகாரங்களை, தனது ஆணையில் தெளிவாக குறிப்பிட்டு தனது பிரதிநித்துவத்தை அவர்களுக்கு அளிக்கலாம்.

**46.வழிகாட்டு நெறிமுறைகள்.**—

(*1*) மத்திய அரசு இச்சட்டத்திலுள்ள விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்காக, இச்சட்டத்திற்கு ஒத்த, விதிமுறைககளையும் வழிகாட்டுதல் நெறிமுறைகளையும் ஒரு அரசு அறிவிப்பின் மூலம் வழங்கலாம்.

(2) குறிப்பாக, மேலே கூறப்பட்ட அதிகாரத்தின் பொதுவான தன்மைக்கு குந்தகம் ஏற்படாமல், அத்தகைய வழிகாட்டு நெறிமுறைகள், அனைத்து விடயங்களுக்கும் அல்லது பின்வரும் விடயங்களுக்கும் மட்டும் வழங்கப்படலாம். அவையாவன:—

(*a*) பிரிவு 2 உட்பிரிவு (n) கீழ் கூறப்பட்டதுப்போல், ஆபத்து மற்றும் சலுகைகள் அல்லது திட்டமிடப்பட்ட தலையீட்டின் மாற்று, இவற்றின் தகவல்கள்;

(*b*) உட்பிரிவு (1)-ன் படி, தெரிவிக்கப்பட்ட ஒப்புதலை பெறும் முறை மற்றும் பிரிவு 5 உட்பிரிவு (2)-ல் கூறப்பட்டதுப்போல் பரிசோதனைக்கு முன் மற்றும் பரிசோதனைக்கு பின் வழங்கப்படும் ஆற்றுப்படுத்துதலின் முறை;

(*c*) பிரிவு 7-ன் படி, எச்.ஐ.வி. பரிசோதனைக்காக, பரிசோதனை மையம் அல்லது நோயறிதல் மையம் அல்லது நோயியல் ஆய்வகம் அல்லது இரத்த வங்கி போன்றவை பின்பற்ற வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள்;

(*d*) பிரிவு 11-ன் படி, தரவு பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கும் முறை;

(*e*) பிரிவு 14 உட்பிரிவு (2)-ன் கீழ், எச்.ஐ.வி. தொடர்பான கூட்டு மருந்து சிகிச்சை மற்றும் சந்தர்ப்பவாத தொற்றுகளை மேலாண்மை செய்தல் போன்றவற்றில் பின்படுத்தப்படும் நெறிமுறைகளின் வழிகாட்டுதல்கள்;

(*f*) பிரிவு 18 உட்பிரிவு (1)-ன் கீழ் எச்.ஐ.வி. அல்லது எயிட்ஸ் தொற்றை கொண்டுள்ள குழந்தைகளின் பராமரிப்பு, ஆதரவு மற்றும் சிகிச்சை முறைகள்;

(*g*) பிரிவு 19-ன் கீழ், உலகளாவிய முன்னெச்சரிக்கைகள் விதிகள் மற்றும் பிந்தைய வெளிப்பாட்டின் தடுப்பு மருந்து (Post Exposure Prophylaxis) இவற்றின் வழிகாட்டு நெறிமுறைகள்;

(*h*) பிரிவு 22-ன் படி, எச்.ஐ.வி. பரவலின் ஆபத்தை குறைக்கும் உத்தி அல்லது வழிமுறை அல்லது நுட்பம் போன்றவற்றை நிறைவேற்றும் முறை;

(*i*) பிரிவு 22-ன் படி, மாற்று மருந்து, மருந்து பராமரிப்பு மற்றும் ஊசி மற்றும் குழல் பரிமாற்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தும் முறை;

(*j*) பிரிவு 22-ன் படி, திருமணத்திற்கு முன் தரப்பட வேண்டிய எச்.ஐ.வி. குறித்த தகவல்கள், கல்வி, மற்றும் தகவல்தொடர்பு பற்றிய விதிகள்;

(*k*) பிரிவு 22-ன் படி, காவலில் உள்ள நபர்களுக்கான எச்.ஐ.வி. அல்லது எயிட்ஸ் தடுப்பு, ஆற்றுப்படுத்துதல், பரிசோதனை மற்றும் சிகிச்சை முறை;

(*l*) இச்சட்டத்தின் நோக்கத்தின் படி, வேறு எந்த தலைப்பில் குறிப்பிட வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள்;

**47. சட்டவிதிகளை இயற்ற மத்திய அரசிற்கு அதிகாரம்.–**

(*1*) இச்சட்டத்தில் உள்ள விதிகளை நடைமுறைப்படுத்த, மத்திய அரசானது அரசின் பொது அறிவிப்பின் மூலம், விதிகளை இயற்றவும்;

(*2*) குறிப்பாக, மேலுள்ள விதிகளின் பொதுமை தன்மையை நிலை நாட்ட பாராபட்சமின்றி, கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எல்லாவற்றையும் அல்லது சிலவற்றை குறித்து விதிகள் செய்யலாம். அவையாவன:---

(*a*) பிரிவு 12-ன் படி, நிறுவனங்களுக்கான எச்.ஐ.வி. அல்லது எயிட்ஸ் பற்றிய மாதிரி கொள்கையை அரசின் அறிவிப்பின் மூலம் வெளியிடும் முறை;

(*b*) மத்திய அரசால் வரையறுக்கப்பட வேண்டிய அல்லது வரையறுக்கப்பட கூடிய வேறு எந்த விஷயம்;

**48.சட்டவிதிகளை பாராளுமன்றத்தின் இரு அவைகளின் முன்பும் வைத்தல்.–**

இச்சட்டத்தின் படி உருவாக்கப்பட்ட விதிகள், அவை உருவாக்கப்பட்ட உடனேயே, பாராளுமன்றம் முப்பது நாட்கள் காலத்திற்க்காக திட்டமிடப்பட்டு நடந்துக் கொண்டிருக்கும் போது, அதன் இரு அவைகளிலும், ஒரு அமர்விலோ, தொடர்ந்து நடக்கும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அமர்விலோ, அந்த அமர்வு முடிந்த உடன் உடனே தொடங்கும் அமர்விலோ அல்லது தொடர்ந்து நடக்கும் அமர்விலோ வைக்க வேண்டும்; இரு அவைகளும் அவ்விதிகளில் மாற்றம் செய்யவோ அல்லது அவ்விதிகளை இயற்றவே வேண்டாம் என, சூழ்நிலைக்கு தகுந்தவாறு, தீர்மானித்தால், அந்த மாற்றம் செய்தது மட்டுமே அமலுக்கு வரும் அல்லது மாற்றம் இல்லையென்றால், பழைய படியே அவ்விதிகள் தொடரும்; எனவே, இத்தகைய விதி மாற்றமோ, நீக்கமோ, பாரபட்சமின்றி, முன்பே இயற்றப்பட்ட சட்டத்தின் செல்லுபடியாகும் நிலையில் இருக்க வேண்டும்;

**49.சட்டவிதிகளை இயற்ற மாநில அரசிற்க்கு அதிகாரம் மற்றும் அதனை ஒப்புகைக்காக வைத்தல்.—**

(*1*) மாநில அரசு இச்சட்டத்திலுள்ள பிரிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கான விதிமுறைகளை ஒரு அரசு அறிவிப்பின் மூலம் வழங்கலாம்.

(*2*) குறிப்பாக, மேலே கூறப்பட்ட அதிகாரத்தின் பொதுவான தன்மைக்கு குந்தகம் ஏற்படாமல், அத்தகைய வழிகாட்டு நெறிமுறைகள், அனைத்து விடயங்களுக்கும் அல்லது பின்வரும் விடயங்களுக்கும் மட்டும் வழங்கப்படலாம். அவையாவன:—

(*a*) பிரிவு 14-ன் கீழ், எச்.ஐ.வி. அல்லது எயிட்ஸ்க்கான நோயறிதல் வசதிகள், எச்.ஐ.வி. அல்லது எயிட்ஸ் தோற்றுடன் வாழும் நபரிகளின் கூட்டு மருந்து சிகிச்சை மற்றும் சந்தர்ப்பவாத தொற்றுகளை மேலாண்மை செய்தல் மற்றும் எச்.ஐ.வி. அல்லது எயிட்ஸ் தடுப்பு போன்றவற்றில் பின்படுத்தப்படும் வழிகாட்டு நெறிமுறைகளின் வழிகள்;

(*b*) பிரிவு 23 உட்பிரிவு (1) துணை உட்பிரிவு (a)-ன் படி, குறைதீர்ப்பாணையரின் தகுதி மற்றும் அனுபவத்தை முடிவு செய்தல் அல்லது பிரிவு 23 உட்பிரிவு (1) துணை உட்பிரிவு (ஃப்)-ன் படி, மாநில அரசின் அதிகாரி ஒருவரை குறைதீர்ப்பாணையராக பணிமாற்று நியமனம் செய்தல்;

(*c*) பிரிவு 23 உட்பிரிவு (1) துணை உட்பிரிவு (a)-ன் படி, குறைதீர்ப்பாணையரின் சேவை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை நிர்ணயம் செய்தல்;

(*d*) இப்பிரிவின் உட்பிரிவு (1)-ன் படி, குறைதீர்ப்பாணையர் புகார்களை விசாரிக்கும் முறை; பிரிவு 24 உட்பிரிவு (3)-ன் படி, ஆவணங்களை பராமரிக்கும் முறை;

(*e*) பிரிவு 14-ன் படி, குறைதீர்ப்பாணையரிடம் புகார்ர செய்யும் முறை; மற்றும்

(*f*) பிரிவு 34 உட்பிரிவு (1) துணை உட்பிரிவு (a)-ன் படி, சட்ட நடவடிக்கைகளில் புனைபெயரை பதிவு செய்யும் முறை;

(*3*) இச்சட்டத்தின் கீழ், சூழ்நிலைக்கு ஏற்ப, மாநில அரசு உருவாக்கும் ஒவ்வொரு விதியும், எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக, மாநில சட்டமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

**50.சிரமமானவற்றை நீக்கும் அதிகாரம்.—**

*(1)* இந்த சட்டத்தின் ஏதாவது ஒரு விதியை நடைமுறைக்கு கொண்டு வர சிக்கல்கள் இருப்பின், இச்சட்டத்தில் முரண்பாடு ஏற்படாவண்ணம், அந்த குறிப்பிட்ட சிக்கல் மிகுந்த விதியை நீக்கி, மத்திய அரசானது, தனது அதிகாரப்பூர்வ அரசிதழில் வெளியிடலாம்;

ஆனால், அத்தகைய ஆணையானது, இந்த சட்டம் நடைமுறைக்கு வந்த இரண்டு வருடங்கள் முடிந்தப் பின் வெளியிடலாகாது.

*(2)* இச்சட்டத்தின் கீழ், சூழ்நிலைக்கு ஏற்ப, மத்திய அரசு உருவாக்கும் ஒவ்வொரு விதியும், எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக, பாராளுமன்றதின் இரு அவைகளிலும் தாக்கல் செய்யப்பட வேண்டும்.